மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

குருடர்கள் நம்மை நொண்டிகள் என்கிறார்கள்!

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 31—1—60 | ஒலி 13

ஒழிக! ஒழிக!

பெங்களூர் ஒழிக!

இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு, பெங்களூர் நகரைக் கண்டு பெரும் அதிர்ச்சியும், பிரமிப்பும் கொண்டாராம்!

பெங்களூர் நகரில் அவர் இரண்டு பெங்களூரைப் பார்த்தாரம்! ஒரு பெங்களூரில், கூட கோபுரங்களைப் பார்த்தாரம், மாட மாளிகைகளைக் கண்டாரம், மன்னர்கள் வீற்றிருந்த அரண்மனைகளையும் கண்டாரம்! மற்றொரு பெங்களூரில் குந்தி நுழையும் குடிசைகளைப் பார்த்தாராம், கூரைக்கும் வழியில்லாமல் குட்டிச்சுவராய் நிற்கும் கட்டிடங்களைக் கண்டாராம்! அங்கே வறுமையால் வாடி வதங்கிடும் தாழ்த்தப்பட்ட மக்களையும் கண்டாராம்! இது, நமது பிரதமரை பிரமிக்கச் செய்ததாம்! மற்றவர்களை இது பிரமிக்க வைக்க வில்லையாம், ஆச்சரியத்தையும் உண்டாக்க வில்லையாம்!

நாட்டைப்பற்றி, நாட்டின் நிலையைப்பற்றி ஒரு துளியும் தெரியாத பண்டிதருக்கு இந்தக்காட்சி ஆச்சரியத்தை அளித்திருக்கலாம்! அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம்! நமக்கு, நாட்டு நிலையைப் புரிந்து கொண்டிருக்கும் நமக்கு எப்படி ஆச்சரியத்தை உண்டாக்கும்?

தங்க மாளிகையில் பிறந்து, வைரத் தொட்டிலி வளர்ந்து, சீமையில் படித்து, சிங்கார வாழ்வு நடத்தி—பிற்கால நல்வாழ்வுக்காக சிறைச் சென்று, செங்கோல் பிடித்து நாட்டையாளும் சீமான் பண்டிதருக்கு இந்த காட்சி அதிசயத்தையும், அற்புதத்தையும் உண்டாக்கலாம்! ஆனல் நமக்கு, தினம், தினம் கண்ணால் பார்த்து மனம் புழுங்கிக் கிடக்கும் நமக்கு எப்படி ஆச்சரியத்தை உண்டாக்கும்?

ஏதோ மாநாட்டுக்கு வந்தவர், எப்படியோ பார்க்க நேர்ந்துவிட்ட காட்சியைக் கண்டு அவர் பிரமித்திருக்கலாம்! ஆனல் அங்கேயே வாழ்ந்து, அங்கேயே நடமாடிக் கொண்டிருக்கும் நமக்கு எப்படி ஆச்சரியத்தை உண்டாக்க முடியும்?

பண்டித நேரு ஏதோ பார்க்காத காட்சியைப் பார்த்து விட்டதைப் போல் பதறி இருக்கிறார்! காணாத காட்சியைக் கண்டு விட்டதைப்போல் கலங்கி இருக்கிறார்!

நாடெங்குமிருக்கும் கோரக் காட்சியைத் தான், நகரமெங்கும் இருக்கும் நலிந்த நிலையைத் தான் பெங்களூரிலும் அமைச்சர் கண்டிருகிறார்!

பெங்களூரில் மட்டும் அவர் பார்த்த இரண்டு பெங்களூர் இல்லை! நாடெங்கும், இரண்டு பெங்களூர்கள் உண்டு! நகரெங்கும் இரண்டு பெங்களூர்கள் உண்டு! ஊரெங்கும் இரண்டு பெங்களூர்கள் உண்டு!

சென்னையிலும் இரண்டு சென்னைகள் உண்டு! ஒரு சென்னையில் ஆனந்தம் பொங்கும் அற்புதமும், அழகு ஜொலிக்கும் வண்ண மாளிகைகளும் உண்டு! மற்றொரு சென்னையில் மண்குடிசைகளும், மரணத்தோடு போராடும் மக்களும், சோத்துக்கும், மானம் காத்திடும் ஆடைகளுக்கும் திண்டாடும் ஏழைகளும் உண்டு!

சென்னை மட்டும் இரண்டு சென்னையாக இருக்க வில்லை—மதுரை, இரண்டு மதுரையாக இருக்கிறது—தூத்துக்குடி இரண்டு தூத்துக்குடியாக இருக்கிறது—திருச்சி, இரண்டு திருச்சியாக இருக்கிறது—சேலம், இரண்டு சேலமாக இருக்கிறது—கோவை, இரண்டு கோவையாக இருக்கிறது!

வானத்தைத் தொட்டு விளையாடும் மாளிகைகளும், பூமியை முத்தமிட்டுக் கிடக்கும் குடிசைகளும் பெரும் பணம் படைத்த பம்பாய் நகரில் உண்டு, என்பதை நமது பிரதமர் ஏன் மறந்தார்?

இந்தியத் துணைக் கண்ட மெங்கும்—குறிப்பாக தமிழகம் முழுவதும் இரண்டு பெங்களூர்கள் உண்டு என்பதை இனியாவது நமது பிரதமர் அறிய வேண்டும்!

நாடு விடுதலை யடைந்த இந்த பதின்மூன்று ஆண்டு காலத்தில். பண்டிதர் பதவியேற்று பவனி வந்திடும் இந்த பதின்மூன்று ஆண்டு காலத்தில் தெரிந்து கொள்ளாத, தெரிந்துகொள்ள முடியாத தெரிந்து கொள்ள ஆசைப்படாத இந்த விஷயத்தை இப்போதாவது தெரிந்து கொள்ளட்டும்!

நாடு விடுதலை யடைந்து, நாட்டிலே அசோகச் சின்னம் கொடி பறக்க ஆரம்பித்து ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன! ஆனலும் ஊரெங்கும் இரண்டு பெங்களூர்கள் இருக்கின்றன! ஒரு பெங்களூரில் சீமான்களும், ஒரு பெங்களூரில் தாழ்த்தப்பட்ட ஏழை மக்களும் இருக்கின்றார்கள்!

இந்த அவல நிலை எப்போது ஒழியும்?

"தாழ்த்தப்பட்ட குடியில் பிறந்த கக்கன் மந்திரியாகி விட்டார்! இனி பறையனில்லை, பள்ளனில்லை" என்று ஊரெங்கும் முழங்கி, ஓட்டு வேட்டையாடும் நமது முதலமைச்சர் கனம் காமராஜரும் இதை உணர வேண்டும்!

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, காந்தியாரால் ஹரிஜன மக்கள் என்று அழைக்கப்பட்ட மக்களுக்கு காங்கிரஸ் என்ன நன்மைகளை செய்திருக்கிறது! காமராசர் அவர்களின் நல்வாழ்வுக்காக எந்தெந்த விதத்தில் பாடு பட்டிருக்கிறார்! கூறட்டும்!

ஒரு பரமேஸ்வரனுக்கும், ஒரு கக்கனுக்கும் மந்திரி வேலை கொடுத்து விட்டால் தாழ்த்தப்பட்ட மக்கள் நிலை உயர்ந்து விடுமா! கக்கன் உயரலாம், பரமேஸ்வரன் நிலை உயரலாம்! கந்தன் நிலை உயர்ந்ததா? கடம்பன் நிலை உயர்ந்ததா? உயர்ந்தது என்றால் பெங்களூரில் இரண்டு பெங்களூர்கள் இருக்கக் காரணமென்ன? காமராசர் பதில் சொல்லட்டும்!

கக்கனுக்கு மந்திரி வேலை கிடைத்து விட்டால் மட்டும் போதாது—நேரு பண்டிதர் குறிப்பிட்ட இரண்டு பெங்களூர்கள் ஒழிய வேண்டும்! ஒரு பெங்களூராக காட்சியளிக்க வேண்டும்! பெங்களூரில் மட்டும் இரண்டு பெங்களூர்கள் ஒழிந்தால் போதாது, நாடெங்கிலும் உள்ள இரண்டு பெங்களூர்களும் ஒழியவேண்டும்! அப்போது தான் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை உயரும், அவர்களுடைய வாழ்வும் சிறக்கும்!

பண்டிதநேரு குறிப்பிட்ட, நாடெங்கிலும் உள்ள இரண்டு பெங்களூர்களை ஒழித்து ஊரெங்கும் ஒரு பெங்களூராக்கி ஏழைகளை வாழவைத்து, எளியவர்களைக் காப்பாற்றி எல்லோரும் ஓரினம், அவர்கள் அனைவரும் திராவிடரினம் என்ற நிலையை உண்டாக்குவதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பணி, முதல் பணி உயர்பணியுமாகும்! இந்தப் பண்டிதரும், அவரது சீடக் கோடிகளான கதர்சட்டைகளும் உணரவேண்டும்! ஆம் உணரவேண்டும்! ஆம், உண்மையாகவே உணரவேண்டும்! இல்லையேல் கரை புரண்டோடும் காலவெள்ளம் அவர்களை நிச்சயமாக கடலில் ஆழ்த்தும், உறுதியாகக் கடலில் ஆழ்த்தும்!

பஞ்சசீலம் பேசுவதால் மட்டும் ஒற்றுமை பலப்படாது !

பற்றும் பாசமும் தான் ஒற்றுமைக்கு அடிப்படை !

பொங்கல் விழாவில்

அறிஞர் அண்ணா பேருரை !



சென்ற 14-1-60-ம் தேதியன்று சென்னை ராயப்பேட்டையிலுள்ள தென்னிந்திய நடிகர் சங்கத்தில் எம். ஜி. ஆர். நாடக மன்றமும், மற்றும் இனை நிறுவனங்களும் நடத்திய பொங்கல் விழாவில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு:—

அன்புகெழுமிய நண்பர்களே, பெரியோர்களே, தாய்மார்களே! இன்று இங்கு இவ்வளவு சிறப்பாக நடைபெறும் இந்தப் பொங்கல் விழாவில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரும் மகிழ்வடைகிறேன்.

இந்தப் பொங்கல் திருநாளாகிய இந்த நன்னாளில் கலைத்துறையில் ஈடுபட்டுள்ள நண்பர்கள் ஒன்று கூடி இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடுவதற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த பொங்கல் விழாவை எப்பொழுதும் கொண்டாடுவதை விட இவ்வாண்டு மிகச் சிறப்பாக இம்மன்றத்தினர் கொண்டாடுகிறார்கள்! பொது மக்களும் கலந்துக் கொள்ளும் படி செய்திருக்கிறார்கள்,

நமது நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் கடும் விபத்துக்காளாகி உடல் நலம் பெற்று இங்கு நம்மோடு இருக்கிறார்கள். அவர்களிடத்தில் பணியாற்றுபவர்கள், தங்களைப் பாதுகாப்பவருக்கு நன்றி செலுத்துவதற்கும், அவரிடத்திலுள்ள பற்றையும், பாசத்தையும் தெரிவிப்பதற்கும் இங்கு கூடியிருக்கிறார்கள்.

எம். ஜி. ஆர். அவர்களின் உடல் நலத்தைப் பாதுகாத்த மருத்துவர்களுக்கும் நன்றி செலுத்தினோம் பாராட்டுத் தெரிவித்தோம்! அவர் முன்பை விட இப்போது வலிவோடு இருக்கிறார். அவருடைய பண்புக்கேற்றபடி அவருடைய அமைப்புகளும் முன்பை விட அதிகமாகி வலுப்பெற்று விளங்குகிறது இன்று அவர் வந்திருப்பதே நமக்கு ஒரு பெரும் கண்கொள்ளாக் காட்சியாகவும் இருக்கிறது,

ஈதல்-இசைபட தமிழ் மரபுக்கேற்ப தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் நல்ல முறையில் எம், ஜி, ஆர், பாடுபட்டு வருகிறார்! அப்படிப்பட்டவருக்கு விபத்து ஏற்பட்டது என்று கேள்விப் பட்டதும் நாமெல்லாம் கலக்கமடைந்து விட்டோம் ஆனால் சில உள்ளங்கள் சலசலப்பை காட்டி வந்தது, ஆனால் நமது நண்பர் எம். ஜி. ஆர், முன்பைவிட அதிகமான வலிவுடனும், தெம்புடனும் கலைத் தொண்டும், மக்கள் தொண்டும் புரிவதற்கு வந்து விட்டார்!

எம். ஜி ஆர். அவர்களுடைய நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் அவரைப் பாராட்டுகிறார்கள் என்றால்— அவர்களையெல்லாம் பாதுகாத்து, அவர்களை தம் குடும்பத்தை போன்றவர்கள் என எண்ணி, அவர்களுடைய நலனில் அக்கறை கொண்டிருப்பதால் அவர்கள் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள் அவருடைய உள்ளம் பேங்கைப்போன்றது. அவர் பிறர் வாழ்வதைக் கண்டு மகிழ்கின்றவர்! அதனாலேயே அவருடைய நிறுவனங்கள், ஒன்றிலிருந்து பலவாகி வலுப் பெற்று உறுதியோடு விளங்குகிறது! அவர் தம்மிடமிருப்பதை தம்மிடமுள்ளவர்களுக்குப் பங்கிட்டு அவர்கள் வாழ்வு வளம் பெறச் செய்யும் பண்புள்ளவராக இருப்பதால் தான் அவரிடம் பணியாற்றுபவர்கள் பற்றுடனும், பாசத்துடனும், அன்புடனும் இருந்துவருவதைக் காண்கிறோம்.

கலை உலகில் இருப்பவர்கள்— கலைத் தொண்டு புரிபவர்கள் நல்ல பண்புள்ளவர்களாகவும், நல்ல எண்ணம் படைத்தவர்களாகவும், ஈகை குணங்கள் கொண்டவர்களாகவுமிருக்க வேண்டும்! துன்பப்படுகிறவர்களுக்கு—தம்மைச் சார்ந்தவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் மனம் அவர்களுக்கு இருக்க வேண்டும்! அப்படிச் செய்தால் அவர்களுக்கு இன்பமாக இருக்கும்!

ஈதல், இசைபட என்ற பண்புடனும், இலக்கணத்துடனும் வாழ்ந்து வந்தவன் தமிழன்.

தம்மிடமிருப்பதை — பணம், அன்பு, குணம், மகிழ்ச்சி உழைப்பு, ஆகியவைகளை மற்றவர்களுக்கும் பங்கிட்டு அவர்கள் மகிழ்வோடு வாழ்வதைக் கண்டு வாழ்பவன் தமிழன்! அதற்குத் தான் ஈகை என்றும் சொல்வது.

இந்த முறையைக் கையாண்டு வாழ்பவர் தான் நமது எம். ஜி. ஆர். அவர்களும்.

ஒரு சிலர் கேட்கலாம், எம்.ஜி. ஆர். மலையாளி ஆயிற்றே அவரை வைத்துக் கொண்டு தமிழர் பண்பாட்டைப் பற்றிப் பேசுகிறீர்களே என்று.

எதிலும் குறை கூறிக் கொண்டிருக்க வேண்டுமென்று கருதுகிறவர்களும், குற்றமே கூறிக் கொண்டிருக்க வேண்டுமென்ற குணம் படைத்தவர்களே இப்படிக் கேட்கக் கூடும்.

இன்றைய கேரளத்தைப் பிரிக்காது தமிழகத்தோடு அது சேர்ந்திருந்த காலத்தில்— மொழிவழி மாகாணங்கள் பிரிக்காமல் ஒன்றாக இருந்த போது அவர்கள் தமிழர்களின் பண்பாட்டையும், நாகரீகத்தையும், குணங்களையும் பின்பற்றி வந்தார்கள்! சேர நாடு என்ற பெயரோடு அது விளங்கி தமிழர்களோடு ஒன்றாகி அவர்கள்வாழ்ந்து வந்தார்கள். மலையாளிகள் தமிழர்கள் குணங்களைப் பின்பற்றி அவர்களோடு ஒன்றி வாழ்ந்து வந்தார்கள் ! தமிழர்களாகவே இருந்தும் வந்தார்கள்.

அந்தப் பண்பாட்டைப் பின்பற்றியே தான் நமது எம். ஜி. ஆர், அவர்களும் வாழ்ந்து வருகிறார்கள்! அவரது பண்பாட்டையும் குணங்களையும் பாராட்டி அவரைப் பயன்படுத்தி வருகிறோம்!

ஒரு சிலர் பொங்கலோடு சேர்ந்திருக்கும் முந்திரிப் பருப்பை சாப்பிடாது துப்பிவிடும் குணமுடையவர்களுக்கு இதைக் கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சியின் போது நான் பல, பல விஷயங்களை எண்ணிக் கொண்டிருந்தேன்! அப்படி பெரிய எண்ணங்களை எண்ணுவதை ஆசைப்படுவதை ஆண்டிகள் எண்ணுவது என்று ஒரு சில மேதாவிகள் கூறுகிறார்கள்! எண்ணுவதை உயர்வாகவும், அதிகமாகவே எண்ண வேண்டுமென்று கருதியே நான் எண்ணுகிறேன், ஆசைப்படுகிறேன் !

நான் ஆசைப்படுகிறேன்— நினைக்கிறேன்–எண்ணுகிறேன், இவ்வளவு சிறப்பாக நடைபெறும் இந்தப் பொங்கல் விழா, அடுத்த ஆண்டு பெரிய அளவில்—பொது மக்கள் கலந்து கொள்ளும் வகையில் சென்னை

(4-ம் பக்கம் பார்க்க)

ஒழுக்கத்திலும்-வாழ்க்கையிலும் மக்கள் சிறந்து விளங்குவதற்கு நாடகங்களையும் - சினிமாக்களையும் பயன் படுத்த வேண்டும்!

(அண்ணா பேச்சு)

[3-ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரையிலோ, அல்லது மக்கள் வந்து கூடும் வகையிலுள்ள பொதுவிடங்களிலோ பொங்கல் விழாவை நடத்த வேண்டும். அதில் இசை பாடத் தெரிந்தவர்கள் இசை பாட வேண்டும், நடனம் மாடத் தெரிந்தவர்கள் நடனமாட வேண்டும், நடிக்கத் தெரிந்தவர்கள் நாடகங்கள் போட்டு நடிக்க வேண்டும் அந்த ஆண்டில் புனையப்பெற்றப் பாடல்கள் அந்த விழாவில் அரங்கேற்ற வேண்டும்!

பழங்காலத்தில் நமது மூவேந்தர்கள் ஆண்ட போது இம்மாதிரி செய்து வந்தார்கள், அதே போன்று இசைப் பாடல்களை அந்த விழாவில் பாடப்பட வேண்டும், அப்படி இயற்றியவர்களுக்கு அந்த விழாவில் பரிசுகள் தரப்பட வேண்டும்.

மூவேந்தர் கையாண்ட இந்த முறையை 3 கோடி வேந்தர்களாகிய நாம் பின்பற்ற வேண்டும், அவர்கள் கொள்கையை அவர்கள் செய்து வந்ததை வளர்க்க வேண்டும்!

மற்றும் மனோன்மணி சுந்தரம் பிள்ளை போன்றவர்களின் நாடகங்களை நடத்த வேண்டும். மறறும் பல கவிஞர்களின் கவிதைகளுக்கு நாட்டியம் ஆட வேண்டும் இப்படி யெல்லாம் பயன்படுத்துவோமானால் நாட்டில் கலைத்துறைக்கு நல்ல முன்னேற்றமும், செல்வாக்கும் ஏற்படும்.

கலைத் துறையிலிருப்பவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று பலர் வற்புறுத்திப் பேசினார்கள்!

ஒற்றுமை என்பது பேசுவதால் மட்டும் வந்து வீடாது, அது இயற்கையாகவே ஏற்பட வேண்டும். பற்றும், பாசமும் ஏற்பட்டால்தான் ஒற்றுமை சுலபமாகவும், உண்மையாகவும் ஏற்படும்!

புத்திமதிகள் கூறுவது போன்று "ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்று கூறி விடுவதால் மட்டும் ஒற்றுமை வந்து விடாது. அதற்குப் பதில் வேற்றுமை தான் வளரும் ஒற்றுமை ஏற்படுவது எந்த அடிப்படையில், எந்த நோக்கத்திற்கு அதன் பயன் என்ன என்பன போன்றவைகளை விளக்கி விட வேண்டும்! ?

பிரதமர் பண்டித நேரு கூட ஆசியா நாட்டிலுள்ளவர்களை யெல்லாம் கூட்டி "பாண்டுங்" நகரில் ஒரு மாநாடு கூட்டி அங்கு பஞ்சசீலத்தைப் போதித்தார்! அதனால் என்ன பயன் ஏற்பட்டது! இன்று நடைபெறுவதென்ன? இமயமலை எல்லையில் இப்போது நடந்து கொண்டிருப்பதென்ன? சீனக்காரன் இவர்கள் கழுத்தை நெறிக்கலாமா? இவர்கள் சீனக்காரன் கழுத்தை நெறிக்கலாமா என்பது தான் இன்றைய நிலை. ஆகவே ஒற்றுமை என்பது வெறும் புத்திமதியால் மட்டும் வந்து விடாது. பற்றாலும், பாசத்தாலும், அன்பாலும் நேசத்தாலும் தான் வரும் பஞ்சசீலம் பேசுவதால் மட்டும் வந்து விடாது! உலகத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொருநோக்கோடு இருக்கிறார்கள்! அவர்கள்பல பலஎண்ணத்தோடு இருக்கிறார்கள் 20 ஆண்டுகளாகபஞ்சசீலம்பேசிவந்தும். அவர்களோடு தோழமையோடு இருந்தும் அவர்களுடைய நோக்கங்களையும் எண்ணங்களையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் எண்ணங்களை, நோக்கங்களை இரும்புத்திரை—தங்கத்திரை இட்டு மறைத்து வைத்திருக்கிறார்கள். அது போல் தான் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கமும், லட்சியமும் இருந்து வருகிறது. அதற்கு அதை விட்டு விட முடியாது. அதனால் தான் பற்றும், பாசமும் வேண்டுமென்று கூறினேன்.

எம், ஜி, ஆர். அவர்களுக்கும், அவருக்குப் பின்னால் பல நோக்கங்களும் லட்சியங்களும் கொள்கைகளும் இருக்கிறது. அவைகளை யெல்லாம் வைத்து தான் அவைகளைக் கருத்தில் கொண்டு தான் அவரும் கலை உலகில் பாடுபட்டு வருகிறார். சாதம் ஆக வேண்டுமானால் அடுப்பில் பாத்திரம் வைத்து தண்ணீர் ஊற்றி, தண்ணீர் கொதித்த பின் அரிசி கொட்டி அது வெந்த பின் சாதமாகிறது. அரிசி கொட்டியதும் வேகாதற்கு முன் சாதம் ஆகிவிட்டதா என்று பார்த்தால் என்ன பயன். ஆதலால் ஒவ்வொருவருடைய தேவைகள் — லட்சியங்கள், நோக்கங்கள் இவைகளைப்புரிந்து கொள்ள வேண்டும். அது நமக்கு ஏற்றது. நாம் அவர்களும் ஒன்று என்ற பாசம் ஏற்பட்ட பின் தான் ஒற்றுமை ஏற்படும், அதை விட்டு பஞ்சசீலமும், புத்திமதிகளும் கூறி விட்டால் மாத்திரம் ஒற்றுமை வந்து விடாது, வளர்ந்து விடாது.

எம், ஜி, ஆர். மன்றத்தில் ஒற்றுமை வளர்ந்திருக்கிறது என்றால் அங்கு இருப்பவர்கள் அவரை தமது பாதுகாவலர் என்று எண்ணுகின்றனர். அவர் நம்மை காப்பவர், நமது நன்மை தீமைகளில் பங்கு கொள்பவர் அவர் நம்மை கைவிட மாட்டார் என்ற பாசமும், பற்றும் கொண்டிருப்பதால் ஒற்றுமையாக இருக்கிறார்கள். அவரும் அவர்களை பாசத்தோடும், பற்றோடும் அன்போடும் நேசிக்கிறார். நாமனைவரும் ஒன்று என்று எண்ணுகிறார். ஆகவே அவர்களிடம் ஒற்றுமை நிலவுகிறது, வளர்கிறது!

உதாரணமாக நாடகத்தில் ராமரும், சீதையும் வருகிறார்கள். ஒற்றுமையாக இருப்பது போல் நடிக்கிறார்கள். அவர்கள் எண்ணத்தில் கருத்தில் வேறு, வேறு லட்சியங்கள் இருந்த வருகிறது! அது எதிரில் உட்கார்ந்திருப்பவர்களுக்குத் தெரியாது.

நாடக மேடையில் சைடுகளில் நின்றிருப்பவர்களுக்குத் தான் புரியும். இதைக் கொண்டு தான் ஒற்றுமை பாசம் ஏற்பட்டால் தான் பற்று ஏற்பட்டால் தான் ஏற்படும் என்று கூறினேன்.

அது போன்று தான் அரசியல் வாதிகளிடமும் காணலாம். அவரவர்களுக்குப் பிடித்த கொள்கைகள் இருக்கிறது. அதில் பற்றும், பாசமும் ஏற்படுகிறது. நண்பர்களாக இருந்தாலும் லட்சியங்களில் கொள்கைகளில் வித்தியாசம் ஏற்பட்டால் ஒற்றுமை ஏற்படாது

கலையிலும் அது போன்று தான். ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்குப் பிடித்தமான கலைகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அவைகளைப் பின்பற்றுகிறார்கள்.

இப்போது நாம் பொங்கல் விழாவைக் கொண்டாடுகிறோம். அதற்குத் தரப்படும் நோக்கமும் அடிப்படையும் வேறு. அறுவடையை உழைப்பை இவைகளை லட்சியமாகக் கொண்டே கொண்டாடுகிறோம்.

கேரளத்தில் ஓணம் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள் அவையும் நம்முடைய கலைப் பண்பாட்டின் படி கொண்டாடுகிறார்கள். அதிலும் நமக்கும் அவர்களுக்கும் ஒற்றுமை இருக்கிறது. ஆனால் காலத்திலும், நேரத்திலும்மாறுபாடிருக்கிறது!

வடநாட்டில் கொண்டாடும் விழாக்களுக்கும், நமக்கும் பல பேதங்கள் இருக்கிறது.

வங்காளத்திலும், மராட்டியத்திலும் பஞ்சாபபிலும், ஐக்கிய மாகாணத்திலும் கொண்டாடும் விழாக்களிலும் நாம் கொண்டாடும் விழாக்களிலும் மாறுபாடுகளும் நோக்கங்களும் மாறுபட்டிருக்கிறது! தமிழாகளின் தன்னிகரிலலா விழா பொங்கல் விழா.

சென்ற ஆண்டு நான் எம், ஜி. ஆர். மன்றத்தில் பொங்கல் விழாக் கொண்டாடிய போது பார்த்தேன், அவர் புத்தாடை உடுத்தி, புதுச் சட்டை போட்டிருந்தார். அது போன்றே அவரிடம் பணியாற்றுபவர்களும் புத்தாடை அணிந்து மகிழ்ச்சியாக இருந்தார்கள். இன்று நான் தாமதமாக வந்ததால் அக்காட்சியைக் காணமுடியவில்லை.

நான் இன்று பேசும் போது கேட்டேன் அடுத்த ஆண்டு இந்த விழாவை பொது இடங்களில் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று அது நடைபெறுமென்றே நினைக்கிறேன்!

இப்பொழுதும் கொடுப்பவர்களிடம் தான் கேட்பது வழக்கம். அதனால் தான் நான் கொண்ட எண்ணத்தை ஆசையைக் கேட்டேன். ஓய்வு நேரத்தில், அலுப்பை நீக்க, மனம் நிம்மதி யடைய இம்மாதிரி விழாக்களைக் கொண்டாடுகிறோம்! அதனால் நமக்குப் புதிய தெம்பும் வலிவும் ஏற்படும்.

நமது நாட்டில் அகத்தையும் புறத்தையும் ஒன்று சேர்த்து தமிழர்கள் மதித்து வந்தார்கள். அதனால் தான் அகத்தைத் தொகுத்தவர்கள் 400 என்றும், புறத்தைத் தொகுத்தவர் 400 என்றும் தொகுத்தனர்! ரோம் நாட்டில் புறத்தை வளர்த்தனர். கிரேக்கியர்கள் அகத்தைவளர்த்தார்கள்.

இரண்டு நாட்டினரும் தனித் தனியாக வளர்த்தனர். ஆனால் தமிழன் அகத்தையும் புறத்தையும் ஒன்று சேர்த்து வளர்த்து வந்தான்.

இன்றைய தினம் நம் நாட்டில் அகத்தை வீடு என்றும்,புறத்தை வீடுக்குப் பின்புறம் என்றும் எண்ணுகின்றனர். வேறு சிலர் அகத்தைப் படுகுழி என்றும் எண்ணுகின்றனர். அவர்கள் படுகுழியில் விழுந்தவர்கள், அகத்தையும், புறத்தையும் தனித்தனியாக எண்ணக் கூடாது! ஒன்றாகவே எண்ண வேண்டும். அகம் என்பது உள்ளத்து எண்ணங்களை ஒன்றுபடுத்தித் தருவதாகும். இதற்கேற்றபடி நாடகம் வேண்டும். கலைஞர்களாகிய நீங்களும் புறத்தில் மட்டுமல்லாது அகத்திலும் சிறந்து விளங்க வேண்டும்.

அவர்கள் புறத்தையே எண்ணி வாழ்கிறார்கள். இன்று ஒரு நடிகர் தாம் நடிப்பதற்காக தாம் வாங்கும் முதல் அட்வான்ஸ் பணம் பட்டுச் சட்டைக்குத் தான் உபயோகமாகிறது.

நம்முடைய புற வாழ்வு நம்மை சுற்றி பிருப்பவர்களுக்கும், சூழ்ந்திருப்பவர்களும் வாழப் பயன்படவேண்டும் சங்கீதம் ரசிப்பதற்காக மட்டும் இருக்கக் கூடாது. உள்ளூர ஒன்றி அதில் லயிக்கும்படி இருக்க வேண்டும். நாம் உயர்ந்திருக்கிறோம், நம்மைச் சார்ந்தவர்கள் உயர்ந்திருக்கிறார்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்! அது போன்று தான் நமது எம். ஜி. ஆர். அவர்களும் வாழ்கிறார்! அவர் இன்று ஒரு எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறார்.

ஒரு சிலர் தாம் வாழ்ந்தால் போதும், தன்னோடு தமது உயர்வு இருந்தால் சரி என்று எண்ணுகின்றனர். மற்றவர்களை அண்டவிடாது வாழ்கின்றனர். கலை உலகிலுள்ளவர்களின் தொண்டு நாட்டுக்குப் பயன்பட வேண்டும்.

ஒரு நாடோ, நாட்டு மக்களோ நல்ல நிலைமை இருக்க வேண்டுமானால் அந்த நாட்டில் நல்ல துரைத்தனம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் அங்கு கலைகள் வளர முடியும். அந்த துரைத்தனம் சரிவர நடக்க வேண்டுமானால் மக்கள் தான் அவர்களை இடித்துக் கேட்க வேண்டும்! பண்டைக் காலத்தில் துரைத்தனம் மக்களோடு இணைந்து மக்களின் நன்மைக்காக இருந்து வந்தது. அந்தக் காலத்தில் துரைத்தனம் தவறுமேயானால் புலவர்கள்—கலைஞர்கள் கேட்டு வந்தனர்.

மக்கள் எந்த வழியோ அந்த வழியே என்றபடி அந்தக் கால

(11-ம் பக்கம் பார்க்க)

ரோஜா மலரை எந்தப் பெயரில் அழைத்தாலும் மணக்கும்!

மலநாரிப் பூ என்று அழைப்பதால் மணம் வீசாமல் இருக்காது!

காங்கிரஸ்காரர்கள் எப்படித் தூற்றினாலும் கழகத்தின் புகழும் செயலும் மங்காது!

நாவலர் இரா. நெடுஞ்செழியன் பேருரை



திரு. வி. க. முத்தமிழ் மன்றத்தின் ஆண்டு விழாவும், தீ விபத்து நிதியளிப்புக் கூட்டமும் நகராட்சி மன்ற உறுப்பினர் தோழர் தி. சு. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது.

அது போழ்து புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், சத்திய வாணிமுத்து எம். எல். ஏ, கோ. செங்குட்டுவன், கே. சுப்பிரமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசினர்.

தோழர்களே! சற்று முன்பு இங்கே புரட்சி ஏற்பட்டது! மீண்டும் விட்ட இடத்திலே இருந்து தொடர்வோம். நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் நெய்வேலியில் ஒரு நாடகத்திற்கு தலைமை தாங்கவேண்டியிருப்பதால் இடையிலே பேசவேண்டிய நெருக்கடி ஏற்பட்டது!

அடுத்து பேசுவதற்கு நான் இங்கே நிற்கிறேன்!

திரு. வி. க. முத்தமிழ் மன்றத்தார் ஏற்பாடு செய்திருக்கும் இக்கூட்டத்தின் காரணத்தைப் பற்றி விளக்கிக்கூறினேன்!

நமது தோழர்கள் என்னிடத்தில் கூறினார்கள், மாற்றுக்கட்சிக்காரர்கள் ஏசிப் பேசுகிறார்கள்—தூற்றுகிறார்கள் என்று! நமது தோழர்களுக்கு சொல்லுவேன், அவர்கள் எது வேண்டுமானாலும் சொல்லட்டும் மக்கள் மன்றம் இருக்கிறது - மக்களின் மனச்சான்று இருக்கிறது.

மாற்றாரிடத்திலே நாம் மதிப்பை எதிர்பார்க்க முடியுமா? என்றும் வசைபாடத்தான் செய்வார்கள். மாற்றார் நமக்கு மதிப்புரையா கொடுப்பார்கள்?

மாற்றானிடத்திலே நாம் எதிர்பார்க்கும் மதிப்புரை, வாதி பிரதிவாதியிடத்தில் எதிர்பார்க்கும் தீர்ப்பைப் போன்றதாகும்! வாதி, பிரதிவாதியிடமா தீர்ப்பை எதிர்பார்ப்பான்? நீதிபதி இருக்கிறார். வாதி தனது கருத்துக்களை நீதிபதி முன்னே வைக்கிறான். பிரதிவாதியும் தனது கருத்தை நீதிபதியிடம் வைக்கிறான். தீர்ப்பை சொல்ல வேண்டியது நீதிபதி!

நாம் தீர்ப்பை எதிர்பார்க்கும் இடம் மக்கள் மன்றமே தவிர, காங்கிரஸ் காரனிடத்திலே அல்ல!

பதினோரு வருடங்களாக நமது வழக்கை மக்கள் மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறோம். நமது தீர்ப்பு மக்கள் மன்றத்தை பொறுத்திருக்கிறது.

புளியந்தோப்பு தீ விபத்து 1958ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ம் தேதி நடைபெற்றது! தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தவர்கள் யார்? ஏசிப் பேசுகின்ற மாற்றுக் கட்சிக்காரர்களா? நண்பர்கள் கொடுத்தார்கள்.

கட்சி ரீதியிலே அல்ல—மனிதர்கள் என்கிற முறையில் ஒரு சொட்டு கண்ணீர் விட்டார்களா? அவர்களுக்காக பாடுபட்டார்களா? அவர்கள் கட்சி ரீதியிலேகூட ஈடுபடவில்லை! நாம் உதவி செய்வது சரி என்று எண்ணுகிறோம், செய்தோம்! ஏன்? பாதிக்கப்பட்டவர்கள் நம்மவர்கள் என்னும் காரணத்திற்காக!

'காலத்தினால் செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

என்றார் வள்ளுவர்.

நாம் மிகமிகச்சாமான்யமானவர்கள்தான் — நம்மால் இயன்றதை செய்வோம். நாம் மிக மிகச் செல்வாக்கு படைத்தவர்கள் செய்யாத அளவுக்கு செய்கிறோம். தூற்றுகிறார்களே என்று விட்டுவிடவில்லை, செய்ய வேண்டுமென்று நினைத்ததைச் செய்ய முயல்கிறோம்!

நிதி கொடுக்காமலிருக்கிறோம் என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் தூற்றியதாக, இழித்தும், பழித்தும் பேசியதாக நண்பர்கள் முன்பு தெரிவித்தார்கள்.

நிதி கொடுக்கப்பட்ட பணத்தை சுயநலத்திற்காக செலவழிக்க வேண்டுமென்று நினைத்தால் தி. சு. நல்லதம்பி தேர்தலில் நின்றபோது' மக்களே இந்தா முப்பது ரூபாய், நல்ல தம்பிக்கு ஓட்டு போடுங்கள் என்று சொல்லியிருப்பேன். இன்னமும் எனக்கு நினைவிருக்கிறது, தி. சு. நல்லதம்பியை ஆதரித்து நான் இந்த வட்டாரத்திலே ஒரு கூட்டத்திலேயும் பேசவில்லை. காரணம், வர இயலவில்லை! தற்செயலாக இதை உங்களுக்கு சொல்கிறேனே தவிர, மாற்றுக் கட்சிக்காரர்களுக்காக அல்ல!

தேர்தல் நேரத்தில் ஆளுங் கட்சிக்கு தெரிந்த முறை—நமக்கு தெரிந்திருந்தும் செய்யவில்லை—நினைத்திருந்தால் செய்வோம்!

வாக்காளரிடையே மாற்றுக் கட்சிக்காரர்கள், 'மக்கள் கொடுத்தபணத்தை நெடுஞ்செழியன் ஏப்பம் விட்டுவிட்டார்! நல்ல தம்பி ஏப்பம் விட்டுவிட்டார், என்றெல்லாம் கூறினார்கள். மக்கள் கேட்டார்களா?

திராவிட முன்னேற்றக் கழகம் பணத்தை ஏப்பம் விட்டது என்று கூறினார்கள். பாதிக்கப்பட்டவர்கள் கண்களிலே இருந்து கண்ணீர் சிந்தினார்கள். இருந்தும் நம்மிடத்திலே பெரும்பகுதியினர் ஆதரவு காட்டினர். அதிகப்படியான வாக்குகளை அளித்தார்கள், தி. சு. நல்ல தம்பி வெற்றி வீரராக வருகின்ற அளவுக்கு!

தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்பதுபோல் இந்த வட்டாரத்திலே வெற்றி பெற்றிருக்கும் நல்லதம்பி, உள்ளபடியே நல்ல தம்பி.

அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும தூற்றட்டும்! அருமை தோழர்களுக்கு சொல்லுவேன், மாற்றுக்கட்சிக்காரர் எவ்வளவு தூற்றினாலும் அவர்களுக்கு ஆதரவு இல்லை அவர்களுக்கு இம்மியளவு ஆதரவுகூட வளரவில்லை! நம்மைதூற்றி—இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டு எவ்வளவு நாள் வாழ்கிறார்களோ—வாழட்டும்.

சொக்கட்டான் ஆடுகிற போது, தவறான முறையில் காயை நகர்த்தினால் வெட்டுபட்டுவிடும், யோசித்து ஆட வேண்டும். தப்பு ஆட்டம் சுலபமாக தோல்வியை தந்துவிடும். நின்று ஆடினால்தான் ஆட்டம்! மாற்றுக்கட்சிக் காரர்கள் தவறான முறையில் ஆடுகிறார்கள். அது நமக்கு லாபக் கணக்கே தவிர. நஷ்டக் கணக்கல்ல! தப்புக் கணக்கு போடுகிறவர்கள், நீடூழி வாழ்வார்களாக!

கங்கையில் சாக்கடை நீர் கலப்பதால் கங்கை கெடாது!

மாற்றார் தூற்றட்டும் வளர்வோம்! நீங்கள் அறிஞர் அண்ணா பேச்சையும் காமராஜர் பேச்சையும் எடை போட்டுப் பாருங்கள்!

மக்கள் பார்க்காமலா இருப்பார்கள்? அண்ணாவின் பேச்சிலே அழகு தமிழ் இருக்கும், அடுக்கு மொழி இருக்கும். காமராஜர் பேச்சிலே தடுக்கு மொழி இருக்கும்.

அண்ணாவின் பேச்சிலே அரசியல் தெளிவு இருக்கும். அவருடைய கருத்துக்கள் அத்தனையும் நாட்டைப் பற்றி, நாட்டு மக்கள் நல்வாழ்வு பற்றியதாகவே இருக்கும். நாம் சொல்லுகின்ற திட்டங்களை எள்ளளவும்

(8-ம் பக்கம் பார்க்க)

வீர உணர்ச்சிகளை வெளிப்படுத்த விழாக்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

எல்லோரும் இன்புற்றிருப்பதே மகிழ்ச்சிக்குரிய விழாவாகும்!

சென்னை கொத்தவால் சாவடி தமிழர் விழாக் குழுவின் சார்பில், கொத்தவால் சாவடியில் 24-1-60ம்தேதி மாலை 6-மணிக்கு கொத்தவால்சாவடி மார்க்கட்டில் பொங்கல் விழா, நடைபெற்றது.

அன்று காலை சுமார் 3000 பேர்களுக்கு மேல் ஏழை மக்களுக்கு உணவளிக்கப்பட்டது! 150 பேர்களுக்கு ஆடைகள் அளிக்கப்பட்டது. பல இயக்கத் தோழர்கள் இயக்கப் பாடல்களைப் பாடினார்கள்.

விழாக் கூட்டத்திற்கு திரு. சந்திரன் தலைமை தாங்கினார்.

தோழர்கள்செயராமன், கோ. செங்குட்டுவன் ஆகியவர்கள் பேசினார்கள்.

பின் வழக்கறிஞர் வி. பி. ராமன் அவர்கள் பொங்கல் விழாவைப் பற்றியும்,நாட்டுப்பிரிவினையைப் பற்றியும் பேசினார்.

பாராளுமன்ற உறுப்பினரும், கழக முன்னணி வீரருமான சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் பேசியதாவது.

சொல்லின் செல்வர்

ஈ. வெ. கி. சம்பத் விளக்கம்.

அன்புள்ள தலைவர் அவர்களே, பெரியோர்களே நண்பர்களே, தாய்மார்களே!

இன்று இங்கு பொங்கல் விழாக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்!

இந்தக் கூட்டம் மிகவும் நெருக்கடியான இடத்தில் கூட்டியிருக்கிறார்கள். மக்கள் மிகவும் பெருவாரியாகக் கூடியிருக்கிறீர்கள்! வெளியே, உள்ளேயும் மேடைக்கு வர முடியாத நிலையில் கூட்டம் இருக்கிறது!

நீங்களெல்லாம் அமைதியாகவும்,கண்ணியமாகவுமிருந்துகூட்டம் சிறப்பாக நடத்த ஒத்துழைக்க வேண்டும்!

எனக்கு முன் பேசிய தோழர் வி.பி.ராமன் அவர்கள், உங்கள் மனதில் கொண்டிருக்கும் எண்ணங்களைப் பற்றி பேசுவோம், உங்களுக்குப் பிடித்தமான கருத்துக்களை, இன்று நாட்டிற்குத் தேவையான கருத்துக்களைப் பேசுவோம் என்ற எண்ணத்திலேயே வந்து கூடியிருக்கிறீர்கள் என்று கூறினார். அது உண்மை தான். இன்று மக்கள் எது நினைக்கிறார்களோ, தேவையோ அவைகளை நாங்கள் பேசுவோம் என்று எண்ணியே கூடியிருக்கிறீர்கள்.

எனது நண்பர் தோழர்ராமன் அவர்கள் நாட்டு நிலையைப் பற்றியும், இந்தப் பொங்கல் விழா கொண்டாடுவதன் நோக்கம் பற்றியும் உங்களிடம் விளக்கினார்.

தோழர் ராமன் அவர்கள் பேசும் போது, நான் பல விஷயங்களை எண்ணிக் கொண்டிருந்தேன்! என் சிந்தனையெல்லாம் பொங்கல் விழா, இப்படித் தான் கொண்டாட வேண்டுமா? புதிய முறைகளை புகுத்தி மக்களெல்லாம் சேர்ந்து மகிழ்ந்து இருக்கும்படியான நிலையில் கொண்டாட மார்க்கம் என்ன செய்வது என்று எண்ணிக் கொண்டிருந்தேன்!

பொங்கல்விழா மதசார்போடு, அர்த்தமற்ற கருத்துக்கள் கூறி வந்ததை மாற்றி, இந்த விழாவின் சிறப்பை மக்கள் உணரும்படியும், இந்த விழா கொண்டாடுவதன் நோக்கம் பற்றியும் மக்களிடையே பரப்பினோம். அதன் படி இன்று எங்கும் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது!

இன்று காலை நமது பொதுச் செயலாளர் அவர்களின் தங்கைக்குத் திருமணம் நடைபெற்றது. அப்பொழுதும் எண்ணிக் கொண்டிருந்தேன், இப்பொழுது நடத்திக்கொண்டு வருவது போலவே திருமணங்கள் நடக்க வேண்டுமா. திருமணங்களில்ஒன்றிரண்டு பேர்கள் பேசுவதும், வந்திருக்கும் மக்கள் நிம்மதியாக உட்கார்ந்திருப்பது போன்ற நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்து நடக்க வேண்டுமா?

பழைய காலத்தில் திருமணங்கள் நடைபெற வேண்டுமானால், மணவறையில் மணமக்களை உட்கார வைத்து புரோகிதன் அருகில் அமர்ந்து அங்கிருப்போருக்கு புரியாதபடி கத்திக் கொண்டு, ஆலம், அரசு குச்சிகளைப் நெருப்பில் போட்டு நெய் ஊற்றி புகை வளர்த்தி. அங்குள்ளோரை அவஸ்தைக்குள்ளாக்கி, அர்த்தமற்ற கருத்துக்களை இதற்குக் கூறி வந்தார்கள். இது மிகவும் இழிவானது! அறிவுக்குப் பொருந்தாதது! திருமணம்புதிய முறையில் நடத்தச் செய்ய வேண்டுமென்று நினைத்து சுயமரியாதைத் திருமணங்கள், புரோகிதமற்ற மணங்கள், பகுத்தறிவுக்குகந்த மணங்களை நடத்தினோம். ஏன் சடங்குகளின் மணங்கள் நடத்துகிறோம், புதியமுறையில் மணங்கள் நடத்துகிறோம், புதிய முறையில் மணங்கள் நடப்பதன் நோக்கமென்ன, பழைய திருமணங்களால் வரும் இழிவுகள் இவைகளைப் பற்றி திருமணங்களில்பேசி வந்தோம். இன்று மக்கள்நாம் கூறி வந்ததைஉணர்ந்து, கூறிவந்ததைப் பின்பற்றி திருமணங்கள் நடத்த முற்பட்டு விட்டனர்! எங்கும் பகுத்தறிவு திருமணங்களை நடத்த ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் அது தொடர்ந்து நடக்க வேண்டுமா? நாம் ஆரம்பித்ததில், ஏன் சுயமரியாதைத் திருமணங்கள் செய்கிறோம் என்று பேசி வந்ததை உணர்ந்து அதன் படி செய்கையில் நடந்து வரும் போது, அதன் படியே இன்னும் நடந்து வர வேண்டுமா? திருமணம் நடப்பதில் ஏதாவது புதிய முறை ஏற்பட வேண்டுமா என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தேன்!

சுமார் 30 அல்லது 34 ஆண்டுகளுக்கு முன் பெரியார் ஈ, வெ. ராமசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்து மக்களிடம் உள்ள மூட நம்பிக்கைகளை ஒழிக்க பிரச்சாரம் செய்து வந்தார். அந்தப் பிரச்சாரத்தின் பயனாக திருமணங்களிலும் மாற்றங்கள் செய்தோம்! மக்களிடம் நாம் பிரச்சாரம் செய்யும் போது அவர்களையே கேட்க ஆரம்பித்தோம், திருமணங்களில் புரோகிதம் ஏன் என்று கேட்டோம்.சடங்குகள் ஏன் என்று கேட்டோம், மணமக்கள் 3—4 முறை மணவறையை ஏன் சுற்றுவது என்று கேட்டோம்!

அம்மி மிதிப்பது, அரசாணி சுற்றுவது, அருந்ததி பார்ப்பது என்ற மூட நம்பிக்கையுடைய சடங்குகள் ஏன் என்று கேட்டோம்.

மக்கள் உணர்ந்தார்கள்.

இப்படி "ஏன்? ஏன்" என்று நாம் கேட்டதை மக்கள் உணர்ந்தனர்! அறிவு பெற்றனர், தெளிவு பெற்றனர்! எங்கும் இன்று புரோகித மற்ற—சடங்கற்ற பகுத்தறிவு திருமணங்கள் நடந்து வருகிறது. 30—35 ஆண்டுகளுக்கு முன் நாம் சொன்னதை. மக்கள் உணர்ந்து கொண்ட பின்பும் அதை அதன் படியே நடத்தி வரவேண்டுமா? திருமணம் நடக்கும் இல்லங்களில் நாம் முன்பு பேசினோம் என்றால், மணமக்களின் உற்றார்களுக்கும் பெற்றோர்களுக்கும்,

நாம் செய்யும் சுயமரியாதைத் திருமணம்

எல்லோரும் செய்கிறார்கள்—எங்கும் செய்கிறார்கள்!

நண்பர்களுக்கும், சுயமரியாதைத் திருமணங்களின் நோக்கம் பற்றியும், வைதீகத் திருமணங்களால் நமக்கு வரும் இழிவைப் பற்றியும் பேசி விளக்கம் தந்தோம். மக்கள் உணர்ந்தனர். இப்போது சடங்கற்ற—புரோகித மற்ற பகுத்தறிவு மணங்கள் செய்கின்றனர்! அப்படி நடைபெறும் திருமணங்களில் போய் பழைய படி பேசிக் கொண்டிருக்க வேண்டுமா? கொள்கைகள் விளங்கியவர்கள், பின்பற்றுபவர்கள் வீட்டில் போய் கொள்கைகளைப் பற்றிப் பேச வேண்டுமா? இந்த முறை மாறி புதிய முறை புகுத்த வேண்டாமா?

இன்று நமது பொதுச் செயலாளர் வீட்டில் திருமணம் நடைபெற்றது. அங்கும் போய் திருமணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க வேண்டுமா? இதை யெல்லாம் சிந்திக்க வேண்டும். இது எனது மனதில் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இனியும் அந்த முறை தேவை இல்லை என்று எண்ணுகிறேன்.

உங்களுக்கு இன்னும் ஒரு விஷயம் கூறுகிறேன்! அதிலிருந்து விளங்கிக் கொள்வீர்கள்!

பொதுச் செயலாளர் தங்கையின் திருமணத்தில் நமது நண்பர் திரு. மதியழகன் அவர்கள் பேசுவதற்கு வந்தார். நின்றார்! 3 நிமிடத்தில் மணமக்கள் படித்தவர்கள் அவர்களுக்கு ஒன்றும் கூற வேண்டியதில்லை! அவர்கள் நீடூழி வாழ்க என்று பேசி முடித்து விட்டுப் போய் விட்டார். வேறு என்ன பேசுவது? 1 மணி நேரம் பேசிக் கொண்டிருக்க முடியுமா? படித்துப் பட்டம் பெற்ற தம்பதிகளுக்கு இயக்கத்தைப் பரப்பி வரும் குடும்பத்துக்கு, இயக்கக் கொள்கைகளை உணர்ந்தவர்கள் கூடியிருப்பவர்களுக்கு என்று உணர்ந்தே தான், அவர் அப்படிப் பேசினார். அது போலவே டி. கே. சீனுவாசனும் 2 நிமிடத்தில் பேசினார்! ஆசைத்தம்பியும் 3 நிமிடத்தில் பேசினார்! வி. பி. ராமன் 5 நிமிடத்தில் பேசினார்! நானும், 3 நிமிடத்தில் மணமக்களை வாழ்த்தியும். மணமகன் எனக்குத் தெரிந்தவரென்றும் பேசினேன்! ஆகவே அவசியம் நாமெல்லாம் சிந்தித்து மணம் நடைபெறும் முறைகளில் மாற்றம் காண வேண்டும் பண்டைய வைதீக திருமணங்களில் பெண்களும், ஆண்களும் ஓடி, ஆடி, ஏதேதோ செய்து வந்தார்கள் ஆனால் நமது திருமணங்களில் இரண்டொருவர் பேசுவதும் மற்றவர்களெல்லாம் கம் என்று உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பது சரியல்ல, எல்லோரும் அன்று மகிழ்ச்சியாக இருக்கும் படி செய்ய வேண்டும்! இதை எண்ணித் தான் திருமணத்தில் பேசிக் கொண்டிருந்த அண்ணன் பொன்னம்பலனார் அவர்கள், திருமணத்திற்கு வந்திருப்பவர்களுக்கு வேலை தருவதற்கும், அவர்களும் மண நிகழ்ச்சியில் கலந்து மகிழ்ச்சி அடைந்தார்கள் என்றிருக்க வேண்டுமென்று எண்ணி, திருமணத்திற்கு வந்திருந்தவர்களைப் பார்த்து, "நான் மண மகள் வாழ்க" என்று கூறுவேன், நீங்களெல்லாம் "நீடூழி வாழ்க" என்று சொல்லுங்கள் என்று கூறி அம்மாதிரி சொல்லும்படி செய்தார்!

ஆகவே மீண்டும், மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன். இப்போது நடைபெற்று வரும் நமது மணவிழாக்களிலும் புதிய முறைகள் வேண்டும்.

விழாக்கள் நடக்கிறது என்றால், அதனால் மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும், அந்த மகிழ்ச்சியில் அவர்கள் பங்கு கொண்டு இன்பம் அனுபவிக்க, வேண்டும் அதுவன்றி யாரோ இரண்டொருவர் பேசுவதும், அதை பலர் கேட்டுக் கொண்டிருப்பதும் என்பது விழாவாகாது. அதனால் மன நிம்மதியும் ஏற்படாது! தோழர் செங்குட்டுவன் பேசும் போது 3000 பேர்களுக்கு அன்னமிட்டதாகவும், 150 பேர்களுக்கு ஆடைகள் வழங்கப்பட்டதாகவும் கூறினார். இது மகிழ்ச்சியானதும், பலனுள்ளதுமாகும். அதுபோலவே இங்கு மக்களுடைய மகிழ்ச்சிக்குரியபல நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும், இங்கு திரு. எம்.ஜி.ஆர் வரப் போகிறார். அவர் போன்ற கலைஞர்கள் இங்கே வரவேண்டும். அவர்களைப் போன்றவர்கள் மக்களையும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டும். பேசுவதால் மட்டும் விழாவாகி விடாது.

சிலப்பதிகாரத்தில்! பார்க்கிறோம். இந்திரவிழா என்ற விழாவை அங்குள்ள மக்கள் எல்லாம் கலந்து, ஆடிப்பாடி, கோலாகலமாக அனுபவித்து வந்திருக்கிறார்கள். மக்களெல்லாம் கடற்கரைக்குச் சென்று அங்கு இசைகள் பாடி மகிழ்ந்திருக்கின்றனர். அப்படி மகிழ்ச்சியுற்றிருந்த காதலர்கள் மகிழ்ச்சியோடு இசை பாடிக்கொண்டிருக்கும் போது தான் அவர்களுக்கு வேதனை புகுந்திருக்கிறது! அதனால் தான், நான், விழா என்று கூறினால் அதில் உணர்ச்சி இருக்க வேண்டும். என்று கூறினேன்!

கிராமங்களில் இந்தப் பொங்கல் விழாக் கொண்டாடுவதில், உணர்ச்சியும், வீரமும், வலிவும் காட்டும் வகையில் கொண்டாடுகிறார்கள். எங்கள் பகுதிகளில் மஞ்சவிரட்டி என்ற பெயரால் துடுக்குத் தனமும், ஆவேசமும் கொண்டிருக்கும் மாடுகளை வாலிபர்கள் அதை அடக்கி நிறுத்தி தங்கள் வீரத்தைக் காட்டுவார்கள்.

தாய்மார்கள், கும்மி அடித்து பாட்டுக்கள்பாடி தங்களதுமகிழ்ச்சியைத்தெரிவித்துக் கொள்வார்கள். கிராமப் பெண்கள் நகரப் பெண்களைப் போன்று அறைகுறையான சினிமாப் பாடல்களைப் பாடமாட்டார்கள். நல்ல பொருளும், அருத்தமுமிகுந்த வகையில் முதல் வரியிலிருந்து கடைசிவரைப் பாடி முடிப்பார்கள். எனக்குக்கூட பாடல்கள் சரிவரத் தெரியாது. ஒரு பாட்டுக்கூட முழுவதும் நினைவிலிருக்காது.

மகிழ்ச்சியாக ஒரு விழா கொண்டாட வேண்டுமானால், அதில் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமானால், அங்கு பாடல்கள் பாடி மகிழ வேண்டும். அந்தப் பாடல்களை அங்குக் கூடியிருப்பவர்கள் எல்லோரும் சேர்ந்து பாடவேண்டும்.

நம்முடைய நாட்டில் அந்த மாதிரியான மகிழ்ச்சி தரும்படியான நிகழ்ச்சிகள் கிடையாது. இங்கு ஒருவர் பாடினால் மற்றவர்கள் கேட்பதற்குக் கூடுவார்கள். ஓரிருவர் நடித்தால், அதை பார்ப்பதற்கென்று கூடுவார்கள் அமெரிக்கா, பிரிட்டன்,போன்ற மேலை நாடுகளில் பொது விழாவானால் அன்று அங்குள்ள மக்களெல்லாம் ஒன்று கூடி ஒரு பாடலை எல்லோரும்ஆடிப்பாடி மகிழ்வார்கள். அதனால் ஆபாசமானவைகளை கைக்கொள்ள வேண்டுமென்று கூறவில்லை நம்முடைய நாகரீகத்திற்கும் பண்பிற்கும் ஏற்றதை நாம் கையாண்டு விழாக்கொண்டாட வேண்டும்.

விழாக்கள் கொண்டாடுவது என்றால் சொற்பொழிவுகள் ஆற்றுவதுதான் என்றுநினைத்து சொற்பொழிவாற்ற தலைவர்களை நாடுகிறோம், அந்தநிலையில் தான் இன்று நம்நிலை இருக்கிறது. உங்களை நான் குறை கூற இதைக் கூறவில்லை. நான்கூட முன்பெல்லாம் எங்கள் ஊரில்பொங்கல்விழாக் கொண்டாடவேண்டுமென்று நினைத்தால், நமது அண்ணாவை அழைப்போம். நாம் அழைத்தால் வந்து விடுவார். அதுபோன்று நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமியை அழைக்கலாம். அவரும் வந்து விடுவார். கூட்டம் நடத்தலாம் என்று எண்ணுவதுண்டு, அது தான் இருக்க வேண்டுமா? புதிய முறைகளைக் கையாளக்கூடாதா என்று சிந்திக்கிறேன். மாற வேண்டுமென்றும் நினைக்கிறேன்

இன்னும் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். இன்று புரோகித மற்ற,சடங்கற்ற திருமணங்களை —பகுத்தறிவு திருமணங்களை நாம் தான்நடத்துகிறோம் என்று எண்ணவேண்டாம்! நமது மாற்றுக் கட்சியினரும் நடத்துகிறார்கள். உதாரணமாக நான் மன்னார்குடிக்கு ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்தேன். அந்தத் திருமணம் நடைபெறும் வீட்டிற்கு எதிரில் ஒரு பந்தல் போட்டு கதர்கொடி கட்டி, ஒலி பெருக்கி அமைத்து பாட்டுக்கள் முழங்கிக் கொண்டிருந்தது. அது என்ன என்று வினவினேன், அந்த வீட்டிலும் திருமணம் என்றும், அந்தத்திருமணம் செய்பவர் காங்கிரஸ்காரர் என்றும், அவரும், சடங்கற்ற புரோகித மற்ற திருமணம் செய்து கொள்கிறார் என்றும், ஆனால் "கதர்" திருமணம் என்று கூறிக்கொள்கிறார் என்றும் சொன்னார்கள். நாம் முப்பதாண்டுகளுக்கு முன் கூறியதை இன்று நமது மாற்றார்களும் உணர்ந்து கொண்டார்கள். ஆகவே, இனிசீர்த்திருத்த திருமணங்களைப் பற்றி பிரச்சாரம் செய்ய வேண்டியதில்லை. எல்லாக் கட்சியினரும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள்!

நமது நண்பர் வி.பி. ராமன் அவர்கள் பேசும்போது இங்கு இடநெருக்கடியால் மிகவும் அல்லல் படுகிறீர்களென்றும், இந்த நெருக்கடி உலகத்திலும் ஏற்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்த குறுகலான இடத்தில் இந்த விழா நடத்துவதற்கான காரணத்தை தோழர் கோ. செங்குட்டுவன் குறிப்பிட்டார். அந்தக் காரணங்கள் ஏற்றுக்கொள்பவைகளாக இருக்கிறதது. இருந்தாலும் உங்களுக்கு சற்று பொறுமை கட்டுப்பாடும், உணர்ச்சியும் வேண்டும், முன்னால் உட்கார்ந்திருக்கும் நீங்கள் பின்னால் இருப்பவர்களுக்கும் வெளியே ஏராளமாக வந்து நின்று கேட்பவர்களுக்கும் தொலலை தரும் வகையில் நடந்து கொள்கிறீர்கள்! இது அநாகரீகமானது—நாம் மற்றவர்களுடைய நிலையையும் உணர்ந்து கட்டுப் பாடுடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்! இப்படி நடப்பவர்கள், நம்மவர்களாக இருந்தாலும் சரி, மாற்றுக் கட்சியாளராக இருந்து தொல்லை தர இப்படிச் செய்தாலும் சரி, இனியேனும் இம்மாதிரி கூட்டங்களில் கண்ணியத்தோடும், கட்டுப் பாட்டோடு நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பின் புரட்சி நடிகர் பேசப் போவதால். அமைதியாக இருந்து கூட்டத்தை நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன்!

★★

விருந்து வேடிக்கைகாக 10 லட்சத்தை பாழாக்கும் கவர்னர்பதவி தேவைதானா?

(நெடுஞ்செழியன் பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் நண்பர்கள் எடை போட்டுப் பார்க்க மறந்தாலும் அரசியல் பண்பாடு கொண்டவர்கள், மக்கள் பணியிலே நாட்டங் கொண்டவர்கள் எண்ணிப் பார்க்காமலா இருப்பார்கள்?

எடை போட்டு பார்க்கிற போது எடை நம்பக்கம்தான் இருக்கிறது. நாம் எடுத்துச் சொல்லுகின்ற வாதங்கள் கருத்துள்ளவை!

எப்பொழுது ஒருவன் கை ஓங்குவான், என்றால் பேச முடியாத நிலையில் தான் கை ஓங்குவான். எதிரியின் வாதத்தை அடக்க முடியாதபோது தான், தடியெடுத்து ஆத்திரப்பட்டு கை ஓங்குவான்!

வாதத்திற்கு காரண காரியங்களை எடுத்து வைத்து—அடக்க முடியாதவர்கள் போல் மாற்றுக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது போல—நாம் எடுத்து வைக்கின்ற கருத்துக்களுக்கு அவர்கள் எடுத்து வைப்பது இலக்கியச் சான்றுகள் அல்ல!

அவர்கள் கூறுவதெல்லாம்—அண்ணாத்துரை குட்டை, நெடுஞ்செழியன் நெட்டை என்கிறார்கள். இரண்டையுமே மக்கள் எடைபோட்டு பார்க்கிறார்கள்! நமது கருத்துக்கு, கருத்து அவர்களால் வைக்க முடியவில்லை! அவன் கவிஞன், இவன் கலைஞன் என்றும், அவன் நிறம் சிகப்பு, இவன் நிறம் கருப்பு என்றுதான் பேசுகிறார்கள்.

நாம் எடுத்து வைக்கின்ற கருத்துக்கு-கருத்து, எழுத்துக்கு எழுத்து அவர்களால் வைக்க முடியவில்லை. அவர்கள் தூற்றுவதால், ஏசிப் பேசுவதால் நமது அறிஞர் அண்ணாவின் புகழும், பெயரும் மங்கா!

ரோஜா மலரை எந்த பெயரில் அழைத்தாலும் மணக்கும்!

எருக்கம்பூ என்று அழைத்தால் — பெயரில் மாற்றமிருக்கலாம், ஆனால் மணத்தில் மாற்றமிருக்காது! இருக்கின்ற வாசனை அப்படியே இருக்கும். காமராசர், காட்டாமணிபூ என்று அழைப்பதால் ரோஜா பூவுக்கு மணம் போய்விட்டது என்று நினைப்பார்களா? இருக்கிற வாசனை அப்படியேத்தான் இருக்கும்!

மலநாரிப்பூ என்று அழைத்தாலும் ரோஜா மணக்கும்! மலநாரிப்பூ என்று அழைப்பதாலே மலத்தின் வாசனை வந்துவிடாது!

ரோஜாவை மல்லிகை என்று அழைத்தாலும், காட்டாமணி பூ என்று சொன்னாலும், மலநாரிபூ என்று அழைத்தாலும் ரோஜா பூவுக்குள்ள வாசனை ரோஜாவுக்கு இருப்பதுபோல் அண்ணாவை காங்கிரஸ்காரர்கள் எப்படி ஏசிப் பேசினாலும், தூற்றினாலும் அவரது பெயரும் புகழும் மங்கா!

நம்முடைய நண்பர்களிலேயே நான்தான் சற்று உயரமானவன்! வீட்டிற்குள் நுழைகின்ற போது வாசற்படி இடித்துவிடக் கூடாது என்பதற்காக குனிந்து செல்கிறேன்,

நாம் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு பதில் சொல்ல முடியாத காங்கிரஸ்காரர்கள் நம்மைப்பற்றி, உருவத்தைப் பற்றியும் உயரத்தைப்பற்றியும் பேசுகிறார்கள்!

சில வேளைகளில் விலைக்குக் கூட சில பண்டாரங்களையும் பரதேசிகளையும் கூப்பிட்டு திட்டச் சொன்னார்கள்

ஆரம்பத்தில் எவ்வளவோ ஏசிப்பார்த்தார்கள். இவைகளினால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி குன்றிவிடவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டம் போட்டு கொள்கை கோட்பாட்டை மக்கள் மன்றத்திலே சொல்கிறது. மக்களுடைய ஆதரவு நமக்கு கிடைக்கிறது! நாளுக்கு நாள் நமது நம்பிக்கையும் உறுதிப்பாடும் வளர்ந்துகொண்டே வருகிறது!

மாற்றுக் கட்சிக்காரர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் ஏசட்டும். அருமை நண்பர்களுக்கு சொல்லுவேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏசட்டும், பேசட்டும்! திராவிடர் கழகத்திலே இருந்து நாம் பிரிந்தபோது பெரியார், நம்மை அன்னக்காவடிகள் என்றார்! அதனால் நாம் வளராமல் இல்லை! நம்மை ஏசுகின்றவர்கள், ஒரு நாள் நம்மைப்பற்றி உணருவார்கள். நாம் சொல்லுகின்ற கருத்து அப்பழுக்கற்ற கருத்து! அவர்கள் வாழட்டும்—அவர்களைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

நாம் எடுத்து வைக்கின்ற காரண காரியங்களை அவர்களால் அழிக்க முடியவில்லை, ஆகவே ஏசுகிறார்கள்!

சட்ட மன்றத்தில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் எடுத்துச் சொன்ன அதிசயத்தக்க முயற்சியின் வரலாற்றை அறிவீர்கள்.

சட்ட மன்றத்தை கவர்னர் நாலு ஐந்து முறை துவக்கி வைத்துவிட்டார். அப்போதும் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த பதினைந்து உறுப்பினர்கள் கவர்னர் உரையின் போது கலந்து கொள்ளவில்லை. இப்போது உரிமைப் பிரச்னை கொண்டு வந்து அண்ணா மீதும் மற்ற 14 உறுப்பினர்கள் மீதும் உரிமை பிரச்சனை கொண்டு வந்திருக்கிறார். சபாநாயகர் தீர்ப்பு சொல்ல இருக்கிறார்!

தீர்ப்பில் சட்ட மன்றத்திற்கு வரக்கூடாது என்றோ, மன்னிப்பு கேட்கவேண்டும் என்றோ சொல்லக்கூடும்!

பொதுத் தேர்தல் 1957-ம் ஆண்டில் நடைபெற்றது. 1958—1959ம் ஆண்டிற்குள் ஆறாவது தடவையாக கவர்னர் பேச வருகிறார், முதல் தடவையிலே இருந்தே — 'கவர்னர் பதவி அவசியமான பதவி அல்ல-கவர்னர் பதவிமக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒன்று — வெள்ளைக்காரன் காலத்திலே ஆர்தர் ஹோப், வாரன் ஹேஸ்டிங்ஸ், வெலிங்டன் துரை போன்றவர்கள் கவர்னராக தேர்ந்தெடுக்கப் பட்டதுபோல் டெல்லி குடியரசு தலைவரால் நியமிக்கப்பட்டவர்கள்! மக்கள் விரும்பி, வேண்டி நியமிக்கப்பட்ட கவர்னரல்ல!

விருந்து வேடிக்கைக்காக பத்து லட்சம் செலவழித்துக் கொண்டிருக்கும் கவர்னர் தேவை இல்லை. ஒரு காரியமும் ஆற்ற முடியாத கவர்னர் தேவை இல்லை! கவர்னர் பதவி தேவையற்ற பதவி. இதை அரசிற்கு அறிவிக்கவும், வாக்காளர்களுக்கு தெரிவிக்கவும் தான் போக மறுத்தது! இது புதிது அல்ல!

அறிஞர் அண்ணாவின் செயலை புதிதாக கண்டுபிடிப்பதுபோல, இரண்டரை ஆண்டு காலம் தூங்கி வழிந்து கொண்டிருந்தது போல் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இன்று விழித்துக் கொண்டார். கேட்டவர் காமராஜர் அல்ல! சட்டம் தெரிந்தவரான சுப்பிரமணியம்! உரிமை பிரச்னை ஆரம்பத்தில் இல்லை! அரசியல் தெளிவு இருந்திருக்குமேயானால் முதல் கூட்டத்தில் தெரிந்திருக்கவேண்டும். குற்றச்சாட்டை அப்போது தெரிவித்திருக்கவேண்டும்!

காங்கிரஸ் உறுப்பினரான லாசர் என்பவர்தான் உரிமை பிரச்னை கொண்டுவந்தார் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கவர்னரை அவமதித்தனர். இது சட்டத்திற்கே புறம்பானது. இந்திய அரசியல் சட்டபபடி ராஜவிசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்ட இவர்கள் கவர்னர் வட நாட்டை சேர்ந்தவர் என்பதாலே ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டினார்.

சட்ட மன்றத்தில் நிதி அமைச்சர் உரிமை பிரச்னை பற்றி பேசுகிறபோது — நம்மீது குற்றஞ் சாட்டி பேசியபோது நாம், சொல்லி வரும் திராவிட நாட்டு பிரிவினை கொள்கை பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் பற்றியும் நாம் சொல்வதைவிட பத்து நிமிஷம் தெளிவாக சட்ட மன்றத்தில் சொல்லியிருக்கிறார்.

மொழிவழி ஒன்றுபட்டு இனவழியில் சுய ஆட்சி பெற வேண்டுமென்பது, வட நாட்டு பிடியிலே இருந்து விடுபட வேண்டுமென்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை.

வடநாட்டவர்கள் தென்னாட்டவர் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இப்போது இருப்பவர் வடநாட்டு கவர்னர் என்று துவேஷப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள், சபாநாயகர் அவர்களே, கூர்த்த அறிவைப் பயன்படுத்தி தக்க தண்டனை அளிக்க வேண்டுமென்று நிதி அமைச்சர் கூறினார்.

அதோடுமட்டுமல்ல, இங்கிலாந்து சட்டமன்றத்திலே நடைபெற்ற சம்பவத்தையும் படித்துக் காட்டினார் நிதி அமைச்சர்.

நிதி அமைச்சரின் குற்றச்சாட்டுகளை பத்திரிகையை படித்தவர்கள் தெளிவாக உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

வடநாட்டான் துவேஷம் இருப்பதால்தான் கவர்னர் பேச்சுக்கு வரவில்லை என்று கூறுகிறார் நிதி அமைச்சர்.

நண்பர்களே! அரசியல் தெரிந்தோரே, புரிந்தோரே நாம் சட்டமன்றத்திற்கு சென்றபோது முதல் கவர்னர் கேரளத்தை சேர்ந்த ஜான் என்பவர் இருந்தார். அவர் வட நாட்டான் அல்ல! அன்றும் போகவில்லை.

கவர்னர் பதவிமீதுதான் வெறுப்பேத்தவிர, ஆளை பொறுத்த வெறுப்பல்ல! ஜான் மறைந்ததற்குப்பிறகு பிரகாசா, விஷ்ணுராம் மேதி கவர்னர் பதவி ஏற்றார்கள்.

முதல் கவர்னர் ஜான்—கேரளத்தை சார்ந்தவர் — திராவிடரிலே ஒருவர். அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் போனார்களா?

நிதி அமைச்சரின், வாதம் சொத்தையான வாதம்—சோடையான வாதம் என்று சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இதை எடுத்துக் காட்டினேன்,

அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது கூறினார்-நாங்கள் சொல்லுவது ஆளை அல்ல-பதவியைத்தான் என்று கூறினார்.

இங்கே இருந்த கவர்னர் பிரகாசா, அஸ்ஸாம் சென்றதும் அதிக அதிகாரம் தரவேண்டுமென்று டெல்லியோடு சண்டை போட்டு அஸ்ஸாம் மாகாணத்திற்கு அதிக அதிகாரங்களை பெற்றிருக்கிறார். தனிப்பட்டவர் மீதல்ல எங்களுக்கு வெறுப்பு. ஜனநாயகத்திற்கு புறம்பான பதவி — கவர்னர் பதவி என்பதை தெரிவிப்பதற்காகத்தான் வெளியே போவது!

மற்றக் கட்சிக்காரர்களும் இது தவறு அல்ல என்று தான் எடுத்து சொன்னார்கள்.

நிதி அமைச்சர் இன்னொன்றும் சொன்னார். 'கொள்கையை விட்டு ஓடக் கூடாது' என்று அறிவுரை பகன்றார். என்ன நினைத்துக் கொண்டு அப்படிச் சொன்னார்?

(12ம் பக்கம் பார்க்க)

திருக்குறளின் தத்துவங்கள்— 'மாறாத தத்துவங்கள்'

வள்ளுவம் ஒன்றுக்குத் தான் காலம் அடிபணிந்திருக்கிறது!

கவிஞர் கண்ணதாசன் விளக்க உரை!

சேவா ஆசிரமத்தின் பொங்கல் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, கவிஞர் கண்ணதாசன் 'மாறாததத்துவம்' என்னும் தலைப்பில் பேசினார். ஆசிரம வளர்ச்சிக்காகக் கட்டட நிதியாக ரூ 2000 நன்கொடை வழங்கினார் அவரது அன்னையின் நினைவாக 'விசாலாட்சி ஆச்சி மாணவர் இல்லம்'' என்று எழும்பும் அக்கட்டடத்துக்குப் பெயர் வைப்பதாக உறுதி செய்யப்பட்டது அக்கட்டிடம் எழும்ப செலவாகும் தொகையை மேலும் தருவதாக ஒத்துக் கொண்டார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய புனித சூசையப்பர் கல்லூரி பேராசிரியர், திரு தண். கி வேங்கடாசலம் அவர்கள் ''கவிஞர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு ஒருவர் தான் பிறக்கிறார்கள் என்றும், அப்படிப் பிறப்பவர்கள் பிறந்த வாழ் நாளில் மாறாத தொண்டைச் செய்து விட்டுச் செல்கின்றனர் என்றும் அப்படி உலகில் வைத்து மதிக்கத் தக்கவர் கவிஞர் கண்ணதாசன் என்றும் பேசினார்.

பின்னர் கவிஞர் கண்ணதாசன் பேசிய பேச்சு வருமாறு.

13-1-60-ம் நாளன்று, பொங்கல் விழாவில், சிறப்புச் சொற்பொழிவாற்றிய கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பேசிய பேச்சு!

அன்புள்ள பேராசிரியர் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! இப் பொங்கல் விழாவில் என்னைப்பேசும்படி சேவாச்சிரம நண்பர்கள் பலமுறை கடிதங்கள் வாயிலாகவும், நேரிலும் கேட்டுக் கொண்டார்கள். இது சம்பந்தப்பட்டு நானும் பேசுவதாக ஒத்துக் கொண்டு சென்னையிலிருந்து கடிதம் எழுதியிருந்தேன். குறித்த நாளில் என்னால் வர முடியாது போய் விட்டது. நேற்று இரவு என்னை நண்பர்கள் வந்து சந்தித்து, இன்று பேசும்படி அழைத்தார்கள். நானும் ஒத்துக் கொண்டேன். உங்களை யெல்லாம் சந்தித்து, இன்றைய நாளில் பேசக் கூடிய நல்ல வாய்ப்பை அமைத்துத் தந்தமைக்கு நான் பெரிதும் மகிழ்கிறேன். இவ்வாசிரமத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனககு முன் பேசிய பேராசிரியர் அவர்கள் என்னைப் பாராட்டும் முகத்தான் கொஞ்சம் அதிகப் படியாகச் சொல்லி விட்டார்கள்! நான் எப்பொழுதும் பிறர் புகழ்வதைக கண்டு சற்று எச்சரிக்கையாக இருப்பவன்! ஆயினும்பேராசியா அவர்கள் என்னைப் பாராட்டிய புகழுரை எனக்கு மேலும் எனது எழுத்துத் துறையில் சற்று ஊக்குவிக்கும் என்று நம்புகின்றேன்! அவர்கள் பாராட்டிய மொழிகள் நான் ஈடுபட்டிருக்கும் தொழில் துறையில், என்னை இன்னும் கொஞ்சம் எழுத வைக்கும் என்ற அளவில் எனது நன்றியதலை அவர்கட்கும் தெரிவித்துக் கொள்கிறேன்!

அன்புக்குரிய பேராசியர் அவர்கள். பேசும் பொழுது தத்துவம் என்றாலே மாறாதது தானே, மாறாத தத்துவம் என்ற தலைப்பிலிருக்கிறதே என்ற செய்தியைச் சுட்டிக் காட்டினார்கள்! என்னைப் பொறுத்த வரையில், தத்துவங்கள் மாறுகின்றன! நிலையான தத்துவங்கள் என்று சொல்லக் கூடியன வெல்லாம், காலப் போக்கில் மாறியிருப்பதை நான் கண்டிருக்கிறேன்! உதாரணமாக ஒன்று சொல்ல வேண்டுமானால் ஆதியில் மனிதன் பிறந்த சமயததில் இலை—தழைகளைக் கொண்ட உடைகளை உடுத்து வந்தான். காலப் போக்கில் அறிவு வளர, வளர உடை உடுப்பது என்ற ஒரே தத்துவத்தை மேற்கொண்டு, எத்தனையோ வகைகளில் உடைகளை மாற்றிக் கொண்டான்! அது போல் தத்துவங்கள் எல்லாம் பொதுப் படையாக மாறாதது ஆயினும், ஒரே பொதுமைத் தத்துவத்தின் மையத்தில் கிளைத்து எழுந்து புதுமை மாறுபாடுகள் ஏற்படுவது வாழ்க்கையில் பல உண்டு, என்பதை எண்ணி நான் ''மாறாததத்துவம்'' என்று என்னை வந்து கேட்ட சேவாச்சிரமம் நண்பர்களிடத்தில் தலைப்பு தந்தேன்!

பேராசியர் அவர்கள், பேசும் பொழுது எனது கவிதையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்! எனக்கு இளமையிலேயே கவிதை எழுதும் வழக்கம் வந்துவிட்டது! எங்களவர் என்று சொல்லக் கூடியவர்கள், எங்கள் நாட்டில் கணக்கு எழுதித்தான் பழக்கமே தவிர கவிதை எழுதிப் பழக்கமில்லை! (சிரிப்பு) அது போல், என்னுடைய முன்னோர்களில் எவரும் கவிதை எழுதியதாகவும் எனக்கு நினைவில்லை! ஆயினும் நான் குடியிருக்கும் வீட்டில், எங்களுக்கு முன்னர் யாரோ கவிஞர் குடியிருந்ததாக மட்டும் கேள்விப் பட்டதுண்டு! நான் இளமையில் இது போன்ற ஆசிரமம் ஒன்றில் தான் எனது இளமைக் கல்வியைப் பயின்றேன்! நான் பயின்ற இடம் கட்டுப்பாடுகள் மிகக குருகுலம் ஆகும்! நான் இன்று மாலை இவ்வாசிரமத்துக்கு வந்து, நண்பர்கள் காட்டிய இவ்வாசிரம பணிகளை எல்லாம் கண்ட பொழுது, எனக்கு இளமையில் நான் கற்ற குருகுலம் தான் நினைவுக்கு வந்தது!

அரசாங்கத்தார், ஏதோ 15 ஆண்டுகளாகத் திட்டமிட்டுச் செய்து வரும். ஆதாரத்தொழில் கல்வித் திட்டத்தை இவர்கள் 30 ஆண்டுகளாகச் செய்து வருகின்றார்கள்! என்று சொல்லக் கேட்டபோது உண்மையிலேயே நான் வியந்தேன்! இவ்வளவு குறைவான இடத்தில் எவ்வாறு இவ்வளவு தொழில்கள் நடக்கின்றன! என்று உண்மையிலேயே வியந்துபாராட்டினேன்! மேலும் 1500 மாணவர்கட்கு மேலாக இங்கு கல்வி கற்று வருவதாகவும், சொல்லக் கேட்ட நான், இப்பள்ளியின் அமைப்பையும், பயன் கருதாத தொண்டையும், எண்ணி மிகவும் மகிழ்ந்தேன்! இவ்வாசிரமம் எனக்கு எனது குருகுலத்தை நினைவு படுத்துகின்றது என்று சொன்னேன்! அக்குருகுலத்தில் இளமையில் நான் கற்ற, கட்டுப்பாடான கல்வியும், அத்துடன் பன்மொழி புலவர் கா. அப்பாதுரையார் அவர்களிடம் நெருங்கிக் கல்வி கற்க வேண்டிய சூழ்நிலையும் அமைநதமை தான் என்னைக் கவிஞனாக்கியது! உண்மையிலேயே சொல்லப்போனால் நான் வேறு எந்த துறைக்கும் செல்ல முடியாயல். எழுத்துத் துறைக்கு வந்தேன்! இளமையில் நானும் எலோரையும் போல் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அக் காதல் நல்ல முடிவோடு வளராமல் இடையில் முறிந்து விட்டது! அக்காதல் முறிவே என்னைக் கவிஞனாக்கியது! என்று சொன்னால் தப்பில்லை! இச்செய்தியை நான் உங்களுக்கு மட்டும் தான் சொல்கிறேன்! வேறு எவருக்கும் சொல்லி விடாதீர்கள். (சிரிப்பு)

நான் மாறாத தத்துவம் என்று குறிப்பிட்டது திருக்குறளைத் தான்! திருக்குறள், காலத்தைப் பொருத்த வரை பல கருத்து மாறுபாடுகள் உள்ளன! என்னைப் பொருத்த வரை திருக்குறளின் கருத்துக்களும்—தொடர்களும் படராத எந்த இலக்கியமும் தமிழில் இல்லை. சிலம்பை எடுத்துக் கொள்ளுங்கள்—பிற்காலக் கவிதை இலக்கியங்களைத் தான் எடுத்துக் கொள்ளுங்கள். எதைத் தொட்டாலும், திருக்குறள் மணம் கமழ்கின்றது. எங்கு பார்த்தாலும், திருக்குறள் கருத்துக்கள் எதிரொலிக்கின்றன! திருவள்ளுவர் பாடிய அந்த நூல் வாழ்க்கையின் உண்மைகளை உண்மையில் அப்படியே பிழிந்து தருவதால் தான், அதன் தத்துவங்கள், மாறாதத் தத்துவங்களாக, உயிருடன் உலவுகின்றன! வள்ளுவர் பொய்யைப் பற்றி அன்று பேசினார்! வள்ளுவர் காலத்திலேயே பொய் சொல்லும் மக்கள் இருந்திருக்கிறார்கள்! போலும் அந்த பொய் சொல்லும் பரம்பரை இன்று வரை அற்றுப் போகாமல் நீடிக்கிறது. அதனால் திருக்குறளும் மாறாத தத்துவமாக இன்றும் நிற்கிறது (சிரிப்பு)

திருக்குறளுடைய பெருமையை அழகும் சிறப்பும் பொங்க திருவள்ளுவமாலை எழுதிச் சொல்கின்றது. ''ஆயிரத்து முன்னூத்து முப்பது அருந்திருக் குறளும்—என்று தொடங்கும் திருவள்ளுவ மாலைப் பாடல் குறள் முழுமையும் படித்து விட்டால், நீ மன்னு தமிழ் புலவராய் வீற்றிருக்கலாம் என்றும், பிறர் வாய்க் கேட்க நூலுனதோ எனினும் வயறாது பாராட்டுகின்றது! இப்படி எப்பாலவரும் ஒப்பப் போற்றிப் புகழும் முப்பாலாகத் திருக்குறள் நிற்பதால் தான்! அதை மாறாத தத்துவம் என்று நான் அழைக்க ஆசைப் பட்டேன்!

திருவள்ளுவர் சொன்ன அரசியலை கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்! அருமையான திருக்குறள் ஒன்றில் எது அரசியல்! என்பதற்கு விடைதரும் வழியில் எது நல்ல நாடு? என்ற செய்தியை சிந்திக்க வைத்திருக்கிறார். ஒரு நல்ல நாட்டில், மக்களை வருத்தக் கூடிய பசியும், வாழ்க்கையைத் துன்புறுத்தக் கூடிய பிணியும், வல்லவர்கள் பலரால் ஏற்படும் பகைத் தொடர்பும் இருக்கக் கூடாது என்றார் வள்ளுவர்!

உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும் சேராதியல்வது நாடு—என்பது அந்த விழுமிய குறளாகும்! வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி—அந்த வாழ்க்கையில் இன்றியமையாத பொருளாக நிற்கும் அரசியலை உற்று நோக்கி—எவ்வளவு அழகாக இந்தக் குறளை எழுதியுள்ளார் பாருங்கள்! எங்காவது உண்மை அரசு நிலவுகின்றதா என்ற செய்தியை நீங்கள் ஆராய வேண்டுமென்றால் இந்தக் குறளோடு நீங்கள் அரசியலை ஒட்டிப் பார்த்து உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்!

நாட்டை ஆளக் கூடிய மன்னனை, மன்னன்—என்றே குறிப்பிட்டுச் சொல்ல வள்ளுவருககு விருப்பமில்லை. ஏனென்றால் ஒரு நாளில் மன்னராட்சி இருக்கலாம்—அவ்வாட்சி மாறி மக்களாட்சி வரலாம். மன்னனே இல்லாமல் அமையக் கூடிய ஆட்சிக்கும்—சொல்லும் கருத்து பொருந்த வேண்டும் என்பதற்காக நிலன் ஆள்பவன்—என்ற தொடர் வாயிலாக அரசனையோ தலைவனையோ சுட்டிச் சொன்னான்! நிலத்தை ஆளக் கூடிய

(10-ம் பக்கம் பார்க்க)

திருக்குறள் தொல்காப்பியத்திற்கும் முந்திய நூல் !

கண்ணதாசன் பேச்சு

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வர் யாராயிருந்தாலும் இத்தொடருக்குபொருத்தமாகவே அமைவர் என்பது எவ்வளவு நல்ல உண்மை! மன்னனாட்சி மாறி மக்களாட்சி ஒரு நாள் நிலவும் என்பதை எவ்வளவு கூர்ந்து உணர்ந்து இத்தொடரை வள்ளுவர் கையாண்டிருக்கிறார் என்று எண்ணும் பொழுது, மாறாத அந்த தத்துவத்தின், மகத்துவம் நமக்கு தெரியவரும்.

திருக்குறளில் வாழ்க்கையின் விரிவான செய்திகள் எல்லாம் காமத்துப் பாலில் அடங்கியிருக்கின்றன. காமத்துப் பாலை படித்தால் காமம் பெருகிவிடும். அதனால் படிக்காதீர்கள் என்று சொல்பவர்கள் கசடர்கள், உண்மையிலேயே. நான் சொல்கின்றேன், திருவள்ளுவர், காமத்துப் பாலைப் படித்தால் காமம் பெருகாது—காதல் வளரும்—என்கிறேன். காமமும் காதலும் வெவ்வேறாகும். அவை உங்கட்குத் தெரியும் (சிரிப்பு)

காதல் என்பதற்கு விளக்கம் தரக் கூடிய வள்ளுவர் மிகவும் மென்மையாக அச்சொல்லைக் கையாண்டார். ஏனெனில். பெண்ணிடம் ஈ பட்ட செய்தியல்லவா காதல்! பெண்ணுக்குள்ள மென்மையும்—தண்மையும் திருவள்ளுவர் உணர்ந்து வாழ்க்கையின் காதல் நுணுக்கங்களை, கூர்மையாக எழுதிக் காட்டுகின்றார். நீங்கள் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்!

உலகில், பெண் என்னும் பொருளை வர்ணிக்கும் பொழுது கவிஞர்கள் மென்மையையும், ஆண் என்னும் பொருளை வர்ணிக்கும் பொழுது கவிஞர்கள் வன்மையையும், கையாளுவது வழக்கம்! மென்மையான பெண்ணுள்ளத்தில் காதல் பிறக்கும்! வன்மையான ஆண்ணுள்ளத்தில் வீரம் பிறக்கும்! பெண் நடந்தால் மானும்—அன்னமும் நடந்தது போலிக்கும். ஆண் நடந்தால் ஏறும்—எருதும் நடந்தது போலிருக்கும். பெண் தலை குனிந்து தாணி, வெட்கம் பின்னலிட நடக்கிறாள், ஆண் தலை நிமிர்ந்து விரிந்த தோளை நிமிர்த்தி வீர நடை நடக்கிறான்! இவ்வாறு ஆணும் பெண்ணும், வாழ்வியல் நடையில் எவ்வெவ்வாறெல்லாம் மாறுபடுகின்றார்கள் என்பதை நாம் எண்ணினால் மிக்க மகிழ்வாகவிருக்கும்! தன்னுடைய உடல் முழுமையும் வெளியே தெரியக் கூடாது என்பதற்காகப் பெண் தான் உடை யணிந்தாள். யாராவது ஆண் கண்டு விட்டால் கற்பு போய் விடுமே என்று பயப்பட்டாள்! இவைகள் யாவையும் சொல்வது போல் சொல்கிறேன். தற்காலப் பெண்களை எண்ணிக் கொண்டல்ல! (சிரிப்பு)

பெண்ணைக் கொடி என்கிறார்கள், ஆணை அக்கொடி பற்றும் கொழு கொம்பு என்கிறார்கள்! இதைத் தான் காமத்துப் பால் சொல்கின்றது! ஒரு தலைவன் வெளியூர் செல்கின்றேன் என்கிறான்! அதைக்கேட்ட தலைவி உள்ளம் தளர்ந்து—சொல் தளர்ந்து என்ன அழகாக மறுமொழி தருகிறாள் பாருங்கள்!

'செல்லாமை உண்டேல்எனக் குறை மற்றுன்தன்' வல்வரவு வாழ்வார்க் குறை,

நீ எங்கும் செல்லாமலிருந்தால் :என்னிடம் சொல்லு. நீ எங்காவது செல்வதாக விருந்தால் உன் வருகையை வருபவளுக்குச் சொல்லு என்று பொருள் பொருந்த அமைந்த அக வாழ்க்கையின் அழகோவியத்தை இக்குறளில் வள்ளுவர் காட்டி, உண்மையில் நம்மை எல்லோரையும் மாறாத தத்துவம்தான் என்று சொல்ல வைக்க முயல்கிறார் என்பதை உணரும்பொழுது பூரிப்பும்—பெரு மிதமும்—எய்துகின்றோம்.

திருக்குறள் ''அகர முதல'' என்று தொடங்கி ''முயங்கப் பெறின்'' என்று முடிவடைகின்றது. தாய்மொழிக்கு முதல் எழுத்தான அகரம் திருக்குறளின் தொடக்கமாகவும், தமிழ் மொழியின் தொடக்கமாகவும் தமிழ் மொழியின் இறுதி எழுத்தான ''னகரம்'' திருக்குறளின் இறுதியாகவும் இருந்து தமிழ் மொழிக்கு அழகு செய்கின்றது! இவ்வாறு காலம் விரிய விரிய தன்னுள் எல்லா கருத்துக்களையும் உள்ளடக்கி திருக்குறளும் விரிகின்றது!

திருக்குறளுக்கு மாசு கற்பிக்க விரும்பும் பெரியவர்கள் எல்லாம் அவர் மேல் எத்தனையோ கட்டுக் கதைகளைக் கட்டி விடுகின்றார்கள்! திருக்குறள் விரும்பாத அவர்கள் சொல்லும்கட்டுக்கதைகளில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! ''ஆதி பகவன் முதற்றே உலகு'' என்று சொன்ன திருவள்ளுவர் தன் தாய்—தந்தையைத்தான் சொல்லிக் கொண்டார் என்று சொல்லும் கதையை நான் இளமையில்கேட்டிருக்கிறேன்! உலகுக்கு ஒரு நூலாக விளங்க வேண்டும் என்ற பொதுமை எண்ணத்தோடு எழுதப்பட்ட குறளில் அவர் தமது தாய்—தந்தையரை சொல்லிக் கொள்வாரா? சற்று நாமெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும், புதுஉரை எழுதிய பாரதிதாசன், பகவு அன் என்பதே பகவன் என்றாயிற்று என்று எழுதி பகவு—என்றால் சூரியன் என்று பொருள் கூறி, உலகுக்கு முதல்வனானகதிரவன் என்று எழுதியுள்ளார்! இவ்வாறு உண்மையோடு ஒன்றிய பொருளை எல்லாம் நாம் திருக்குறளில் காண முடியும்!

சரித்திர காலத்திலும் போர் நடந்தது! இப்போதும் போர் நடக்கின்றது! போர் என்பது அடிப்படை என்பதை எவரும் மறுக்கவில்லை! ஆனால் சரித்திர கால மனிதர்கள் வாள்கொண்டு போரிட்டமையும் தற்கால மனிதர்கள் துப்பாக்கி கொண்டு போரிடுவதையும் போல். அடிப்படைத் தத்துவத்தில் மாறானது நின்று, உண்மை உணர்த்தக் கூடிய நூலாகத் திருக்குறள் தமிழர்களிடத்தில் நின்று வருகின்றது!

திருக்குறளின் உயிர்ப் பிணைப்பு முழுவதும் இயற்கை நிகழ்ச்சியிலே ஒட்டிக்கொண்டு இயங்குகின்றது! அதனால் இந்நூல் எந்தக் காலத்தும் மாறாமல் நிற்க வழியிருககிறது! தனக்கென முரட்டுத் தனமான கொள்கைகளைச் சொல்லு கிறவர்கள் வேண்டுமானால் இரண்டொரு முறையில் இடங்களில் வள்ளுவரோடு மாறுபடலாம்! மற்றபடி நடைமுறையில் கூட மாறாதது திருவள்ளுவம்தான்! அதிசயிக்கக்கூடிய இந்நிலை இயற்கையிலேயே அமைந்ததா? திட்டமிட்ட வள்ளுவரால் செய்யப்பட்டதா? என்பது நாமெல்லாம் ஆராய வேண்டிய செய்தியாகும்!

உலகில் எதுமாறினாலும் மாறாதவை சில! அவை பிறப்பு—படிப்பு—ஒழுங்கிடம்—துணிவு நட்பு—அன்பு—அரசியல்—பொருள் வரவு—செலவு—காதல்—கல்வி—இறப்பு என்றுவகைப் படுத்தலாம்! இவைகளின் நடைமுறைகளை மாற்றலாமே தவிர, இவை நிகழ்ந்தே தீரக்கூடியவை என்பதில் ஐயமில்லை! அதைப் போல் தான் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளும் ஆகும்!

அந்நூல் ஒழுக்கம் விழுப்பம் தரும்—என்பதைச் சொல்கிறது இதை எந்தக் காலம் மறுக்கும்! அவ்வொழுக்கம் விழுப்பம் தருவதால் அது உயிரினும் மேலானது என்கிறது! யார் இதை மறுப்பார், உள்ளத்து அளவுதான உயர்வு என்பதைப் பொருத்தவரை யாறுக்கு மாறுபாடு இருக்க முடியும்! வெள்ளத்தனைய மலர் நீட்டம் பெறுவது இயற்கை. அந்த இயற்கையை யாரும் மாற்ற முடியாது! அதனால் வள்ளுவர் சொன்ன சொல்மாறாதசொல்—மறையாத சொல்—வெல்லும் சொல் அவர் சொலல் வல்லான் அஞ்சான்! அவரது தத்துவத்தை இகல்வெல்லல் எந்தக் காலத்துக்கும் அரிது!

திருவள்ளுவர் காலத்துக்குப் பின் வாழ்ந்த இளங்கோவை எண்ணிப் பாருங்கள்! அவர் எழுதிய நல்லநூல் சிலப்பதிகாரம். அந்நூலில் ஒரு பதினைந்து சதவிகித்தையாவது கழித்துப் பார்க்க நமக்கு மனம் தூண்டுகிறது! கால வளர்ச்சியில், அதன் பின்னர் தோன்றிய மணிமேகலையில் ஒரு முப்பதுசதவிகிதத்தையாவது கழித்துப் பார்க்கலாம். என்று நமக்கு இடம் தருகிறது! காலம் ஆனால் திருக்குறளில் கழிவிற்கே இடமில்லாமல், காலம் அடிபணிந்ததுவள்ளுவம் ஒன்றுக்குத்தான்.

அதனால்தான் வள்ளுவர் தத்துவத்தை மாறாத தத்துவம் என்றேன். அதன் அடிப்படை தத்துவம் என்றும் மாறாது என்ற உண்மை மறுக்க முடியாத உண்மையாகும்.

நானறிந்தவரையில் காலங்களாலும் ஊழிகளாலும், நாகரிக மாறுதல்களினாலும், நாகக மோதுதல்களினாலும் அறிவு வளர்ச்சியினாலும் அல்லதுவேறு எந்தக்காரணத்தினாலும்மாறவே மாறாத தத்துவம் திருவள்ளுவம் ஒன்றுதான்.

வாழ்க்கையில் நடக்கும் எந்த நிகழ்ச்சிக்கும் திருக்குறளில் இடம் உணடு! நடந்த செயல்கள் போல்—நடக்கின்ற செயல்கள் போல்—இனி நடக்கும் செயல்கட்கும் திருக்குறளில் இடம் உண்டு என்று சொல்லி, எண்ணும்பொழுதுதான் நாம் அந்த மாறாத தத்துவத்தின் மேன்மையை உணர முடிகின்றது.

இந்த கருத்தை நான் உங்கட்குத் தெரிவிப்பதின் மூலமாக திருக்குறளிடம் பற்றும்—அக்கரையும்—அன்பும், பெருகி எழ வேண்டும் என்பதை மறுமுறை சொல்லிக்கொள்ள ஆசைப் படுகின்றேன்—உண்மைக் கவிஞரான திருவள்ளுவர் காட்டும் வழி தமிழர்களுக்கு அறவழி என்பதையும்—அதுவே நல்ல அரசியல் வழி என்பதையும் சொல்லி, அவ்வறம் தழுவிய நல்ல அரசியல்சொல்லும் திருக்குறள் அறம் மாறாத அறம்'' என்பதையும் நினைவு படுத்துகின்றேன்.

இவ்வாசிரமத்தார், நடத்தும் இப்பள்ளியைப் பார்க்கும் பொழுது எனக்கும் இளமையில் நான் கற்ற எனது குருகுலம் நினைவுக்கு வருகின்றது என்று சொன்னேன். எத்தனையோ பணிகளை—திறமும் அழகும்பட ஆற்றிவரும் இவர்கட்கு எனது பாராட்டுதல்கள். அத்துடன் நான் இன்றுவரை நிலையங்கள் எதற்கும் நன்கொடையாக எதுவும் தந்ததில்லை. ஆயினும் இவ்வாசிரமத்தையும்—இதன் தொண்டையும் பார்க்கும்பொழுது, ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எழுகின்றது! அதனால், இப்பள்ளியின் நலவளர்ச்சிகாக ரூ. 2000 எனது அன்பளிப்பாக அளிக்கின்றேன்! தேவையை நோக்கி மேலும் எழுதினால் என்னால் இயன்றதைச் செய்கின்றேன் என்று கூறிக்கொண்டு இந்த நல்ல வாய்ப்பை தந்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்!

தன்னைப் போல் பிறரையும் வாழ வைக்கும் தலைமையாளர் எம். ஜி. ஆர்.

(அண்ணா பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னர்கள் இருந்தார்கள். ஆனால் இந்தக் காலத்தில் மன்னர்கள் எப்படியோ அப்படி மக்கள் இருக்கிறார்கள். இன்று எதற்கெடுத்தாலும் சட்டம் போடுவது தான் துரைத்தனம் என்ற நிலையிருக்கிறது.

தூங்குவதற்கும், கண் விழிப்பதற்கும் சட்டம் போடும் நிலையில் நம் துரைத்தனம் இருக்கிறது, அந்தக் காலத்தில் அரசன் தந்தையாகவும், குடிகள் மக்களாகவும் இருந்தார்கள். மக்களின் குறைகள் தங்கள் குறைகளாக, பொறுப்போடு இருந்தது. அந்தக் காலத்தில் துரைத்தனத்திற்கு புலவர்கள், கலைஞர்கள் யோசனை கூறுபவர்களாக இருந்து வந்தார்கள்.

அவர்கள் தான் பொது மக்களின் குறைகளை அரசுகளிடம் கூறுபவர்களாக இருந்து வந்தார்கள். கலைஞர்களுக்கும், புலவர்களுக்கும் தான் அந்தக் காலத் துரைத்தனத்திடம் செல்வாக்கிருந்து வந்தது. புலவர்களும், கலைஞர்களும் தான் அடிக்கடி மன்னர்களிடம் செல்பவர்களாக இருந்து வந்தார்கள். புலவர்கள் பொது மக்கள் பிரதிநிதிகளாக இருந்து வந்தார்கள்,

இன்று நாடகங்களிலும், சினிமாக்களிலும் ஒழுக்கம் கெட்டுவிடுவதாகவும் தரம்கெட்டு வருவதாகவும் சிலர் கூறி வருகிறார்கள். ஆபாசம் நிறைந்திருப்பதாகவும் கூறுகிறார்கள்.

எது ஆபாசம், எது நல்லது என்று கூறவில்லை.

கலை என்பது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பயன்படும்படியாக இருக்க வேண்டும்!

கலை மக்களைப் பாதுகாக்கும் முறையில் இருக்க வேண்டும்! அப்படி இருந்தால் அது ஆபாசம் நிறைந்தது என்கிறது இந்த துறைத்தனம் கலை வளர என்ன செய்தது. போலீஸ் வைத்து அடக்குமுறை செய்வது தான் துரைத்தனம் என்று எண்ணிக் கொண்டிருப்பது சரியல்ல.

ஒழுக்கத்திலும், வாழ்க்கையிலும் மக்கள் சிறந்து விளங்குவதற்கு நாடகங்களையும், சினிமாக்களையும் பயன்படுத்த வேண்டும்!

வாழ்க்கையில் இருக்கும் கேடுகளையும், மக்கள் நல்வழியில் சிறந்து விளங்குவதற்கும் கலையைப் பயன் படுத்த வேண்டும் துரைத்தனம் மக்களுக்காக இருக்க வேண்டுமே ஒழிய தங்களைப் பாதுகாக்கவல்ல!

வரி கொடுக்கிறோம், அது மக்களுக்காக பயன்படுத்த வேண்டும், மக்கள் உயர்வே மன்னர்கள் உயர்வு—மக்கள் இல்லாவிட்டால் மன்னர்கள் இல்லை இதையெல்லாம் துரைத்தனத்திற்கு கலைஞர்கள் எடுத்துக் காட்ட வேண்டும். வரி வாங்குவதற்கே துரைத்தனம் என்ற நம்பிக்கை இருக்கக் கூடாது. மக்களுக்குப் பயன்படும் படியாக—பகுத்தறிவுக்குப் பயன்படும்படியாக கலைகள் வளர வேண்டும்.

சிலர் கூறுகிறார்கள், கலைஞர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதென்று கலைக்கும் அரசியலுக்கும் தொடர்பு இருக்கிறது! கலைஞர்கள் பொது மக்களோடு தொடர்பு கொள்பவர்கள் அவர்கள் அரசியலில் தொடர்பு கொள்ளக் கூடாதென்று கூறுபவர்கள் அர்த்தமற்றவர்கள் அவர்கள் தங்களுக்கு வருமான வரி அதிகமாகும் போது தான், அரசியலைப் பற்றி எண்ணுகின்றனர்.

நம் நாடும், நாட்டு மக்களும், கலையும், கலைஞர்களும் வாழ, நல்ல முறையில் சிறக்க ஒரு நல்ல துரைத்தனம் அமைய கலைஞர்களும், பொது மக்களும் பாடுபட வேண்டும். பாடுபடுபவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் மக்களின் வாழ்வு சிறக்க—அவர்கள் நல்வாழ்வு வாழ கலைஞர்கள் தொண்டாற்ற வேண்டும்,

அதே போன்று துரைத்தனமும் மக்கள் பாதுகாப்புக்காகவும், கலை பாதுகாப்புக்காகவும் நாட்டில் புத்துணர்ச்சியும் புது வாழ்வும் மிளிர்வதற்குப் பாடுபட வேண்டும்.

நான் இன்று உங்கள் மத்தியில் கலந்து பேசும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மீண்டும் மகிழ்ச்சி தெரிவித்து விடைபெறுகிறேன்.

தமிழுக்குத் துரோகம் செய்யும் மாபாவிகள்,

தமிழகத்தை ஆட்சி செய்யும் போது தமிழ் எப்படி வாழும்-வளரும் ?

மேயர் அப்துல் காதர் கேள்வி

தமிழகப் புலவர் குழு சென்னைக்கு வந்தது. அந்தக் குழுவுக்கு சென்னை நகரத்தில் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது!

15—1—60ம் தேதியன்று சென்னை கடற்கரையில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது! அன்று பிற்பகல் பட அதிபர் திரு. ஏ. கே. வேலன் அவர்கள் டீ குழுவினருக்கு விருந்து அளித்தார்!

மாலை சுமார் 40 புலவர்களை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டது. சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர் திரு. எம். எஸ். அப்துல்காதர் அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

திரு. ஏ. கே. வேலன் அவர்கள் புலவர் குழுவினருக்கு 5000 ரூபாய் நன்கொடையளித்தார்,

தலைமை வகித்த மேயர் அப்துல் காதர் பேசியதாவது:

தமிழகப் புலவர் பெருமக்களே! உங்களையெல்லாம் வரவேற்கும் பேறு பெற்றமைக்கு பெருமகிழ்வெய்துகிறேன்.

பெரும் புலவர்களாகிய நீங்களெல்லாம் கூடியிருக்கும் இந்த கூட்டத்திற்கு என்னைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டமைக்கு நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தின் தலைவன் என்ற முறையில் உங்களையெல்லாம் வருக, வருக என வரவேற்கிறேன்.

சென்னை மாமன்றத்தின் சார்பில் உங்கட்கெல்லாம் ஒரு வரவேற்பு கொடுக்க ஆவல் கொண்டேன். காலம் போதாமையால் என் எண்ணம் நிறைவேறவில்லை, அதற்காக வருந்துகிறேன்,

எனது நன்மதிப்பிற்குரிய டாக்டர் ராசமாணிக்கனார் அவர்கள். எனக்கு ஒரு கட்டளையிட்டிருக்கிறார். அதாவது சென்னை நகரத்தில் புதிதாக அமையும் தெருக்களுக்குத் தமிழ் பெயர்கள் இடவேண்டுமென்றும், தமிழுக்குச் சிறப்பிடம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். அவருக்கு பணிவோடு கூறுவேன்.

"என் மதிப்பிற்குரிய டாக்டர் ராசமாணிக்கம் அவர்களே! தங்களது அன்புக் கட்டளையை சிறமேற்கொண்டு பணியாற்றுவேன் என்பதை உறுதி கூறுகிறேன்".

இங்கு பேசிய தமிழகப் புலவர்களெல்லாம் தமிழ் வளர வேண்டியதைப்பற்றியும், தமிழுக்கு இருக்கும் இடுக்கண்களைப் பற்றியும் பேசினார்கள். தமிழ் நாடு, இன்றிருக்கும், இழிநிலையைப்பற்றியும் கூறவில்லை. "தமிழகப் பெரும் புலவர்களே" தமிழ் வளரவேண்டுமானால், தமிழுக்குச் சிறப்பு வரவேண்டுமானால் தமிழகம் இன்றுள்ள இழி நிலை மாறி, உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். அதற்காக நீங்கள் பாடுபடவேண்டும்.

நமது அருமைத் தமிழகத்திற்கு "தமிழ்நாடு" என்று பெயரிடவேண்டுமென்று கேட்டோம். ஆனால் இன்று தமிழகத்தை ஆளும் "மாபாவிகள்" அதை வைக்க மறுத்து விட்டார்கள். ஊட்டியில் வாங்கப்பட்ட ஆரண்மூர் அரண்மனையை வாங்கி அதற்கு "தமிழகம்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். நாட்டிற்குத் "தமிழ்நாடு" என்று பெயரிடும்படிக் கேட்டால் ஒரு வீட்டிற்குப் பெயரிடுகிறார்கள். இது எதைக் காட்டுகிறதென்றால், பெற்று வளர்த்த தாய்க்கு ஆபரணம் சூட்டி மகிழவேண்டுமென்றால், வெறும்பொம்மைக்கு ஆபரணங்கள் சூட்டி, அழகுபடுத்திமகிழ்கிறார்கள், இப்படிப்பட்ட 'அறிவாளர்களை அமைச்சர்களாகக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையைப் போக்க தமிழகப் பெரும் புலவர்களாகிய நீங்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு பெருகிய தமிழகப் புலவர்களெல்லாம் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட தமிழ்நாட்டில் தமிழ் வளர்ந்திருக்கிறது என்றார்கள். அதற்கு தென்னகத்தில் பெரும் பணியாற்றி வரும் திராவிட இயக்கத்தின் பெரும் பணியையே சாரும். அந்த இயக்கம் இன்று தென்னகத்தின் விடுதலைக்காகவும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு வருகிறது. ஆகவே உங்களையெல்லாம் மீண்டும் என் உள்ளன்போடும், சென்னை மாநகரமக்களின் சார்பிலும் வரவேற்கிறேன்.

வாழ்க திராவிடம்! வளர்க தமிழ்!

இலங்கையில் 20 சதம்
Registered as a Newspaper in CEYLON
Regd NoM. 1074 விலை 16 காசு **MALAIMANI** PhoneNo. 83285

அறிஞர் அண்ணாவின் பேச்சு அடுக்கு மொழி !

காமராசரின் பேச்சு தெளிவில்லாத தடுக்கு மொழி !

(நெடுஞ்செழியன் பேச்சு)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் கூறினார்—கவர்னர் இந்த சபையில் உறுப்பினர் அல்ல என்பதை தெளிவுபட விளக்கினார்கள். உறுப்பினர் என்றால் இந்த சபையிலே ஓட்டு அளிக்கும் உரிமை வேண்டும்! அவருக்குக் கிடையாது — கை தூக்க முடியாது!

நான் எப்படி அங்கே சென்று கைதூக்க முடியாதோ? — அப்படித்தான் கவர்னரும்!

205 உறுப்பினர்களுக்குத் தான் சட்ட மன்றத்திலே ஓட்டளிக்கும் உரிமை உண்டு! நேரு கூட ஓட்டளிக்க முடியாது!

சட்ட மன்றத்திலே உறுப்பினர் என்றால்தான் ஓட்டளிக்க முடியும்—ஒட்டியும் வெட்டியும் பேச முடியும்! இவ்வளவையும் பெற்றிருக்கவில்லை கவர்னர்!

சட்டமன்றத்தை கூட்ட முடியும்—மேல் சபையை கூட்ட முடியும் ஆனால் ஓட்டளிக்கும் உரிமை அவருக்கு இல்லை!

நான் இங்கே பேசுகிறேன்—நீங்கள் கேட்கின்றீர்கள்! நான் பேசுகிறவன் — நீங்கள் கேட்கின்றவர்கள்! இந்த இடத்திலே நீங்கள் பேசினால்—நீங்கள் பேசுகின்றவர்கள் — நான் கேட்கிறவனாவேன்!

கவர்னர் நினைத்தால் சபை கூடும். நீங்கள் கூட்டினால் நாம் கூடுவோம்!

இன்னொன்றும்சொல்லுவேன், சட்ட மன்றத்திற்கு அவமதிப்பு தருவதாக இருந்தாலும் இந்திய பீனல் கோர்ட் சட்டப்படி வழக்கு தொடர்ந்தால், தீர்ப்பளிக்கும் அதிகாரம், உரிமை நீதி மன்றத்திற்குத்தான் உண்டே தவிர, சட்ட மன்றமல்ல தீர்ப்புக் கூறுவது!

நிதி அமைச்சர் இன்னொன்றும் கூறினார், இந்தமாதிரி வராமல் இருப்பது சட்டசபை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதாக இருக்கிறது என்றும் கூறினார்!

அண்ணாவும் மற்ற நண்பர்களும் சட்ட மன்றத்திற்கு செல்லாதது எப்படி இடையூறாகும்?

எப்படி இருந்தால் இடையூறு? ஆசைத்தம்பி, கவர்னர் உட்காரும் இடத்திலே உட்கார்ந்துகொண்டு கவர்னரை உட்காரவிடாமல் செய்தால் அது இடையூறு என்று சொல்லலாம்!

கவர்னர் காரைவிட்டு இறங்கியதும் சட்டமன்றத்து படிக்கட்டுகளிலே நமது உறுப்பினர்கள் படுத்துக்கொண்டு கவர்னரை வரவிடாமல் செய்தால் அது இடையூறாகும். நாங்கள் இதைச் செய்யவில்லை! காங்கிரஸ்காரர்கள் சில இடங்களிலே செய்திருக்கிறார்கள்!

கேரளாவில் அருமை காங்கிரஸ்காரர்கள் செய்த அட்டகாசம் வெட்கத்திற்குரியதாகும். கேரளத்தில் காங்கிரஸ்காரர்கள் செய்ததுபோல, பதினைந்து உறுப்பினராகக் கொண்ட முன்னேற்றக் கழகம் செய்ததா? அங்கே எத்தனை தடவை கூச்சல் போட்டீர்கள்? சட்ட மன்றத்தில் பெருங் கூச்சல் போட்டீர்கள். அங்கே நீங்கள் ஜனநாயக பண்புப்படியா நடந்தீர்கள்?

பஞ்சாப் சட்டமன்றத்தில் சபாநாயகர் உட்காரும் இடத்திலே ஒரு உறுப்பினர் உட்கார்ந்துகொண்டு 'இன்றைக்கு நீ இல்லை—நான்தான்' என்று கூறினாராம். மற்ற மாநிலங்களில் நாற்காலிகளை வீசியெறிந்து வீண் குழப்பம் விளைவித்திருக்கின்றனர். அப்படிப்பட்ட இழி தன்மையிலா நாங்கள் நடந்து கொண்டோம்!

கவர்னர் உரையின் போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வரவில்லை என்று குற்றஞ் சாட்டுகிற நிதி அமைச்சர் சுப்ரமணியமே, அன்று வரவில்லை! ஏன் இவர் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை? இது எப்படி குற்றமாகும்? வருவதும் வராததும் அவரவர்கள் பிரியம்! கவர்னர் பேச்சைக் கேட்டுத்தீர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

ராஜகோபாலாச்சாரியார் முதன் மந்திரியாக இருந்த போது — பிரகாசா கவர்னர்! அப்போது சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக பிரகாசம் இருந்தார்!

கவர்னர் பேச எழுந்தார்! அப்போது எதிர்க்கட்சித் தலைவரான பிரகாசம் பேசுவதற்கு எழுந்தார். கவர்னர், பிரகாசத்தைப் பார்த்து, உட்கார் என்றார். பிரகாசம் அவர்கள் கவர்னரைப் பார்த்து You Sit Down என்று கூறிவிட்டு. ஒரு மணி நேரம் பேசினார். தன் பேச்சை முடித்துக்கொண்ட பிறகு சட்ட மன்றத்தை விட்டு வெளியேறினார். அப்போது இருந்த காங்கிரஸ்காரர்களுக்கு இது தெரிந்திருக்கும். அதைப் போலவா நாங்கள் செய்தோம்?

இந்திய அரசியல் சட்டம் நிலையானதல்ல! திருத்துவதற்கான உரிமை இந்திய அரசியல் சட்டத்திலேயே இருக்கிறது என்றும் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அரசியல் சட்டத்தின் அமைப்பை மாற்றுவதற்கும், அந்த திருத்தத்தை சொல்லவும் சட்டம் எனக்கு அனுமதி அளித்திருக்கிறது என்றும் கூறினார்.

வெள்ளைக்காரன் காலத்தில் சட்ட மன்றத்திற்கு சென்ற சத்தியமூர்த்தி சொன்னார் — வெள்ளைக்காரனுடைய சட்டத்தை உடைக்க, சிரழிக்க உள்ளே நுழைகிறோம் என்று கூறினார். அதுபோலவே இந்திய அரசியல் சட்டத்தை திருத்த— திராவிடத்தை அமைக்க, டெல்லியின் ஆதிக்கத்திலே இருந்து விடுபட்டு தனிஉரிமை பெற, அகில உலகத்திற்கும் அறிவிக்க சட்டமன்றம் நுழைந்திருக்கிறோம்.

சட்டத்தை உடைக்க அனுமதி பெறாதவர்கள் நீங்கள்! நாங்கள் இருக்கின்ற காலத்திலேயே அதைச்செய்வோம் — சொல்லாமல் அல்ல; சொல்லிவிட்டு!

மறைந்திருந்து செய்யமாட்டோம்! தண்டவாளங்களை பெயர்த்தெடுத்து, தந்திக்கம்பிகளை அறுத்தெரிந்து திராவகத்தை முகத்திலே வீசி ஒளிந்து அட்டகாசம் புரிந்ததுபோல புரியமாட்டோம். நேருக்கு நேராக அல்ல-இரவோடு இரவாக இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து இப்போது தியாகிகள் பட்டம் பெற்று பொது மக்களிடையே உலாவுவதைப்போல் இருக்க மாட்டோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட போராட்டத்தில் ஈடுபடுகிறதென்றால் போலீஸ் அமைச்சருக்கு அறிவித்துவிட்டு, போலீஸ் கமிஷனருக்கு தெரிவித்துவிட்டு, பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிட்டுவிட்டு செய்வோம். 144 என்று தடை போட்டால் அதை மீறுவோம்! உடைக்கவேண்டுமென்றால் சிறு விரலை அசைத்தால் போதும் — நாற்காலிகள் உடையும்! இந்தக் கூத்து பல மாநிலங்களில் நடைபெற்றிருக்கின்றன, அப்படிப்பட்ட பண்பற்ற முறையிலே நாங்கள் நடந்துகொள்ளமாட்டோம்!

இவர்களுக்கு இருக்கிற உள்நோக்கம், இருக்கிற பதினைந்து பேரை எப்படியாவது தொலைக்கவேண்டுமென்பது! இப்போது பதினைந்து பேர் வெளியே வந்தால் அடுத்த தடவை சட்டமன்றத்தில் 150 பேர்கள், நாங்கள் தான்! எங்களுக்கு உள்ளே இருந்தாலும் லாபம்தான்-வெளியே இருந்தாலும் லாபம் தான்! ஆப்பை அசைத்துவிட்டு எதுவோ அல்லல் பட்டது என்பார்களே — அதுபோல இப்போது நிதி அமைச்சரின் நிலையாகிவிட்டது!

சட்ட மன்றத்திலே இருந்து அண்ணாவையும் மற்ற நண்பர்களையும் வெளியே அனுப்பினால் தான் நிம்மதி என்று நினைத்தால் —நாட்டு மக்களிடையே சொல்லவும், திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் சக்தியிலே இன்னும் விரைவாக வளருவதற்கும் வாய்ப்பாகும். இதுவும் நல்லது தான்! அதனாலே திராவிட முன்னேற்றக்கழகம் ஒழிந்துவிடாது! அழிந்து விடாது!

இன்று, திரும்பிய பக்கமெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டம் நடைபெறுகிறது! நாமும் அதிகமாக பேசினால் தான் மக்களிடையே செல்வாக்கு பெற முடியுமென்று காமராசரும் நாள்தோறும் பேசத் தலைபட்டிருக்கிறார். இதுவும் நல்லது தான்!

திராவிடநாடு கேட்பது கவைக்குதவாதது என்றும், சாக்கடை என்றும் கூறிவருகிறார் காமராசர். திராவிட முன்னேற்ற கழகம் நகரசபையில் கம்யூனிஸ்டுகளோடு கூட்டு சேர்ந்தது நொண்டிகளின் கூட்டு என்று கூறினார். எங்களை நொண்டிகள் என்று கூறுகிற இவர்கள் கேரளத்தில் பி, சோக்களுடனும், முஸ்லீம் லீக்குடனும் சேர்ந்தார்களே அதற்குப் பெயர் என்ன?

திராவிடநாட்டுப் பிரிவினை தற்கொலைக்கொப்பானது என்றும், "திராவிட நாட்டுக்கு எல்லை எது, என்றும் மாற்றுக் கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள்.

நல்லறிவு படைத்த மாற்றுக் கட்சி நண்பர்களுக்கு சொல்வேன், திராவிட நாடு கற்பனை என்றால் நீங்கள் பாடுகிற தேசிய கீதமான ஜனகனமனவில் எப்படி திராவிடம் வந்தது? இந்திய அரசியல் சட்டத்தின் முதல் பக்கத்தில் ஏன் எழுதினீர்கள்?

ஆட்டை தோளில் போட்டுக் கொண்டு 99 ஆடுதானே இருக்கிறது. இன்னும் ஒரு ஆட்டை காணவில்லையே என்று கூறுகிறவனை பார்த்து-கண்ணுடையவன் இதோ ஆடு — உன் தோளில் இருக்கிறது என்பான், அதே போல் திராவிடத்தை தோளில் வைத்துக்கொண்டே — இந்திய அரசியல் சட்டத்திலேயே எழுதிவிட்டு திராவிட நாடு கற்பனை என்று கூறுகிறார்கள்.

நாம் கேட்கின்ற திராவிடம் இருந்த ஒன்று, இல்லாததை நாம் கேட்கவில்லை.

இழந்த திராவிடத்தை மீண்டும் பெறுவதற்காக ஆக்கத்தோடும் ஊக்கத்தோடும் சிந்தித்து செயலாற்ற வேண்டும், அந்தப் பணியிலே முத்தமிழ் மன்றத்தார் ஈடுபட்டிருக்கிறார்கள். மன்றத்தை இந்த அளவு நடத்திச் செல்லும் அருமை நண்பர்களை பாராட்டுகிறேன்— போற்றுகிறேன். அவர்கள் நல்ல உள்ளம் வாழ்க முயற்சி வெல்க, வெல்க என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ, கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14